பக்கங்கள்: 16

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி10 வெள்ளிக்கிழமை 25.05.2018 | கதிர் 200

## கோப்பாய் விபத்தில் முதியவர் பலி

கோப்பாய் சந்தியில் நேற்றுக் காலை கன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில் 62 வயது நிரம்பிய,

பக்கம் 03

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பேரினவாதத்தைத் தூண்டும் செயல்

## மஹிந்தவின் தீர்மானத்துக்காக காத்திருக்கிறாராம் கோட்டாபய

கொழும்பு, மே 25
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தன்னை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்தால் அதனை ஏற்க தான் தயாராகவே இருக்கிறார் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பக்கம் 14

## கோட்டாபய கடும் சீற்றம்



கொழும்பு, மே 25
"முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுமக்களை நினைவு கூர்வதற்கானதல்ல. மாறாகப் பேரினவாதத்தையும், பிரிவினவாதத்தையும் தூண்டும் செயலே அது."
- இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

பக்கம் 14

## முன்னாள் போராளி விசாரணைக்காக நான்காம் மாடிக்கு

கிளிநொச்சி, மே 25
முன்னாள் போராளியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான க.ஜெயக்குமார் எதிர்

பக்கம் 14

## சட்டவிரோத கேபிள் ரீ.வி. இணைப்புகள் மீது நடவடிக்கை எடுக்க யாழ்.நீதிமன்று அனுமதி

யாழ்ப்பாணம், மே 25
யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் சட்டவிரோதமாக வழங்கப்படும் கேபிள் ரீ.வி. இணைப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்த ஆணைக்குழுவுக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் அனுமதியளித்துக் கட்டளை வழங்கினார்.
யாழ்ப்பாணத்தில் தொலைத் தொடர்பு

பக்கம் 14

## மங்களவை குறி வைக்கும் மஹிந்த அணி

கொழும்பு, மே 25
நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்

பக்கம் 03

## ஞானசாரர் குற்றவாளி

### ஹோமாகம நீதிவான் நேற்றுத் தீர்ப்பு
### தண்டனை ஜூன் 14 இல் அறிவிப்பு



கொழும்பு, மே 25
கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி

பக்கம் 14

## இனி இது ரகசியம் அல்லவே!

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன் நகருமா? நகராதா?
இந்தக் கேள்விக்கும், நான் இப்பத்தியில் அடிக்கடி குறிப்பிடுகின்றமை போல 'வரும்... ஆனால் வராது...!' என்ற சாரப்படத்தான் பதிலளிக்க வேண்டியிருக்கும் போல...!

பக்கம் 03

## லண்டன் கிங்ஸ்ரன் நகர மேயரானார் தமிழர் தயாளன்



லண்டன், மே 25
லண்டன், கிங்ஸ்ரன் நகரத்தின் மேயராக பிறப்பால் ஈழத் தமிழரான வைத்தீஸ்வரன் தயாளன் நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.
கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ரொல்வத் வட்டாரத்தில்

பக்கம் 03

## கராஜுக்குள் பதுக்கி வைத்து 'மாவா' விற்ற இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 25
யாழ். நகரப் பகுதியில் இயங்கி வந்த மோட்டார் சைக்கிள் திருத்தும் இடத்தில் (கராஜ்) பதுக்கி வைத்து மாணவர்களுக்கு 'மாவா' பாக்கு விற்பனை

பக்கம் 14

## ரயில் ஊழியர்கள் ஜூன் 6 இல் வேலைநிறுத்தம்

6 கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்வரும் 6 ஆம் திகதி நள்ளிரவு முதல், 48 மணிநேர வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன என ரயில்வே தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. (ஐ)

## எதிரணியில் மஹிந்த தலைமையை ஏற்றனர் சு.கவின் 16 எம்.பிக்கள்!

### எனினும் கட்சித் தலைவர் என மைத்திரியையும் ஏற்பு

கொழும்பு, மே 25
நல்லாட்சி அரசுப் பக்கத்திலிருந்து விலகி எதிர்க் கட்சி வரிசைக்கு அண்மையில் போய் அமர்ந்த சுதந்திரக் கட்சியின் 16 எம்.பிக்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு இணங்கியுள்ளனர்.
இம்மாத முற்பகுதியில் பிரதமர் ரணில் விக்கிரசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றுக்கு வந்தபோது அதனை ஆத

பக்கம் 14

## 20 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு ஜே.வி.பி.இன்று பிரேரணை சமர்ப்பிப்பு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பான அரசமைப்புத் திருத்தத்துக்கான பிரேரணையை ஜே.வி.பி. இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றது.
தனி நபர் பிரேரணை

பக்கம் 03

## தேசிய அரசை வீழ்த்தும் திட்டம் ஜூன் 26 இல் வெளியிடப்படும்

### சு.கவின் 16 பேர் அணி அறிவிப்பு

கொழும்பு, மே 25
தேசிய அரசைத் தோல்வியடையச் செய்யும் கொள்கைத் திட்டங்களை அடுத்த மாதம் 26ஆம் திகதி வெளியிடப் போவதாக மஹிந்தவுடன் கூட்டு எதிரணியில் இணைந்துக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தெரிவித்தனர்.
2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிப் பெற வேண்டுமாயின் தற்போது

பக்கம் 14

## புதிய அரசமைப்புக்கான நகலுக்கு ஆவணம் தயாரிப்பதற்கு இணக்கம்

### நேற்று வழிகாட்டல் குழுக் கூட்டத்தில்

கொழும்பு, மே 25
நீண்ட காலத்துக்குப் பின்னர் நேற்றுக் கூடிய – புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான – வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில், புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் ஒன்றுக்குரிய ஆவணத்தை நிபுணர் குழு மூலம் தயாரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.
இந்த ஆவணத்தை நிபுணர் குழு அடுத்த இரு வாரத்துக்குள் தயாரிக்க வேண்டும் என்றும் –
அது தயாரிக்கப்பட்டதும், அடுத்த ஒரு மாதத்துக்குள் வழி காட்டல் குழுவின் கூட்டத்தை மீண்டும் கூட்டுவது என்றும் – நேற்றைய

பக்கம் 03

# இலங்கைப் படைகளுக்கு வழங்கிய உதவிகள்; முக்கிய ஆவணங்களை அழித்தது பிரித்தானியா!

கொழும்பு, மே 25

இலங்கையின் தமிழ் அமைப்புகளின் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த 1970ஆண்டுகளின் இறுதிக் காலகட்டத்தில், பிரித்தானியாவின் புலனாய்வு அமைப்புகள் இலங்கைக்கு படையினருக்கு அளித்த உதவிகள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய ஆவணங்களை பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் அழித்து விட்டது எனக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

லண்டனில் இருந்து வெளியாகும் 'தி கார்டியன்' நாளிதழ் இதுபற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டமையால், இலங்கையின் நடந்த கொடூரமான போரின் ஆரம்பகாலத்தில், பிரித்தானிய அரசு இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியமை தொடர்பான, எந்தப் பதிவும் இல்லாமல் போயுள்ளது என கூறப்பட்டுள்ளது.

1978 தொடக்கம் 1980 வரையான காலப்பகுதிகளில் ஆவணப்படுத்தப்பட்ட சுமார் 200 கோப்புகள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும், இவை எப்போது- எங்கு- யாரால் அழிக்கப்பட்டன என்ற விவரங்களைப் பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் வெளியிடவில்லை.

பிரித்தானியாவின் பொது ஆவணங்கள் சட்டத்தின்படி, அரச திணைக்களங்கள், வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்தபோதும், இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் இவை பாதுகாக்கத் தேவையற்றவை என்று பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகம் நியாயப்படுத்தியுள்ளது.

1978 இற்கும் 1980இற்கும் இடைப்பட்ட காலத்தில் தொகுக்கப்பட்ட இலங்கை தொடர்பான 158 ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பதை வெளிவிவகாரப் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதனால், இலங்கையின் பாதுகாப்பு நடைமுறைகளில் பிரித்தானியாவின் தொடர்புகள் பற்றிய தகவல்கள் பொது மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு இல்லாமல் போயுள்ளது என மிடில்செக்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இலங்கை தொடர்பான நிபுணரும், குற்றவியல் நிபுணருமான Rachel Seoighe தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர், உலகப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் யுனெஸ்கோவிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

கென்யா போன்ற பல இடங்களில் நடந்த தவறுகளை மறைப்பதற்காக, அதிகாரபூர்வ ஆவணங்களை அதிகாரிகள் திட்டமிட்டு அழித்து விட்டனர் என்பது தெரியும். காணாமல் ஆக்கப்படுதல்கள் போன்ற பெரிய கொடூரங்கள் நிகழ்த்தப்பட்ட இலங் கையின் போரில், பிரித்தானியா எவ்வாறு உதவியது என்பது பற்றிய தகவல்களை அறியும் உரிமை பொதுமக்களுக்கு உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

அழிக்கப்பட்ட ஆவணங்களின் தலைப்புகளை வெளிவிவகாரப் பணியகம் பாதுகாக்கின்றது. அதன்படி, பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஆயுதங்கள் விற்பனை, வெளிநாட்டு உதவி, அரசியல் புகலிடக் கோரிக்கைகள் என்பன போன்ற முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய விரிவான ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அதேவேளை, பிரித்தானிய பாதுகாப்பு திணைக்களத்தின் ஆவணக் காப்பகத்தில் உள்ள சில ஆவணங்களின் படி, இலங்கையின் தமிழ் அமைப்புகளின் ஆயுதக் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு, பிரித்தானியாவின் எம்.ஐ. 5 மற்றும் எஸ்.ஏ.எஸ். அமைப்புகள், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்காக அனுப்பப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இலங்கை கொமாண்டோக்களுக்குப் பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

எனினும், இவை தொடர்பான விரிவான விவரங்களை உள்ளடக்கிய பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தின் ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளன என 'தி கார்டியன்' சுட்டிக் காட்டியுள்ளது.

## தேயிலை உற்பத்திக்குப் பாடுபவோருக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்!

### சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு



கொழும்பு, மே 25

இலங்கை தேயிலையின் நாமத்தைப் பிரபல்யப்படுத்த அறவிடும் தேயிலை ஊக்கு விப்பு நிதியத்தின் மூலமாக அதற்காக பாடுபடும் மக்களுக்கு என்ன வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இலங்கை தேயிலை சபை (திருத்தச்சட்டம்) சட்ட மூலம் மீதான இரண்டாவது மதிப்பீடு குறித்த விவாதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் தேயிலை உற்பத்தியில் 'சிலோன் டீ' என்ற பெயரை தக்கவைக்க அல்லது பிரபல்யப்படுத்த அதற்கான அறவீடு ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒரு கிலோகிராம் தேயிலைக்கு 3.50 ரூபா தேயிலை ஊக்குவிப்பு நிதியும் அறவிடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு அறவிடப்படும் இந்த நிதியின் மூலமாக என்ன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது? இந்த நிதியின் உரிமையாளரை நியமிக்கும் பணிகள் மட்டுமே இடம்பெற்றுவருகின்றனவே தவிர 'சிலோன் டீ' என்ற பெயரை பிரபல்யப்படுத்த, அதற்கான பாடுபடும் மக்களுக்கு இதனால் என்ன நன்மை கிடைத்துள்ளது?

எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபடும் மக்களுக்கு நியாயமான சலுகைகளும் உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும்.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடி கொலையை கண்டித்து கிளிநொச்சியில் நேற்று போராட்டம்!




முல்லைத்தீவு,மே 25

தூத்துக்குடி படுகொலையை கண்டித்து நேற்று கிளிநொச்சியில் வட கிழக்கு புரட்சிகர இளையோர் பேரவை என்ற அமைப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தது.

நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தூத்துக்குடி பகுதியில் உயிரிழந்த மக்களின் நினைவாக மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## மலையகத்தில் மண்சரிவு 8 குடும்பம் இடப்பெயர்வு



கொழும்பு, மே 25

மஸ்கெலியாப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கவரவில தோட்டம், லோவ்கூர்டன் பிரிவில் மண்மேடு சரிந்துவீழ்ந்ததில் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன.

இந்த அனர்த்தம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களை சேர்ந்தவர்களும், அத்தொடர் குடியிருப்பில் உள்ள ஏனைய ஆறு குடும்பங்களை சேர்ந்தவர்களும், மொத்தமாக 8 குடும் பங்களை சேர்ந்த 36 பேர் தோட்ட வைத்தியசாலையில் பாதுகாப்பாகத்தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் மேலும் மண் சரிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதால் இப்பகுதியில் காணப்படும் ஏனைய குடியிருப்பாளர்களையும் அவதானத்தோடு இருக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## அபாய எச்சரிக்கை தொடர்ந்து அமுலில்

கொழும்பு, மே 25

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் விடுக்கப்பட்ட, மண்சரிவு மட்டும் கற்பாறைகள் சரிந்து விழுதல் ஆகிய அனர்த்தங்கள் தொடர்பான எச்சரிக்கை தொடர்ந்தும் அமுலிலிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடும் மழையையடுத்து, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் அனர்த்தங்கள் தொடர்பான எச்சரிக்கை நேற்று முன்தினம் இரவு விடுக்கப்பட்டது.

இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து இந்த எச்சரிக்கை நடைமுறையிலிருக்கும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, எலபாத்த, குருவிட்ட, எஹெலியகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள், கேகாலை மாவட்டத்தின் புலத்கோபிட்டிய, தெஹியோவிட்ட, தெரணியகல, ருவன்வெல அரநாயக்க, மாவனல்ல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள், நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, கொத்மலை, நுவரெலியா பிரதேச செயலாளர் பிரிவுகள், களுத்துறை மாவட்டத்தின் பாலிந்த நுவர, அகலவத்த, புலத்சிங்கள, இங்கிரிய, வலலாவிட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகள், காலி மாவட்டத்தின் எல்பிட்டிய, நாகொட, நெலுவ, தவலம ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பு உருவாக்கத்துக் கான வழிகாட்டல் குழு நேற்றுக் கூடியபோது சு.க., கூட்டு எதிரணி, 16 எம்.பிக்கள் தரப்பு எனச் சிதறிப் போயிருக்கும் – பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த – ஐந்து பிரநிதிகளும் கூட்டத்துக்குச் சமுகம் தந்தனர்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி நிறுத்தப்பட வேண்டும் என்றோ அல்லது அதைத் தாங்கள் எதிர்க்கின்றார்கள் என்றோ நேற்றைய கூட்டத்தில் அவர்கள் வெளிப்படையாகக் கூறவில்லை.ஆனால்அவர்களது பேச்சு, நடவடிக்கைப் போக்கு, body language போன்றவை அந்த நிலைப்பாட்டைத்தான் எடுத்தியம்பி நின்றனவாம்.

கூட்டம் ஆரம்பித்த கையோடு கூட்டமைப்பின் பிரதிநிதி சுமந் திரன் குறித்து அவர்கள் பாய்ந்து விழுந்தனர்.

'இம்முறை வழிகாட்டல் குழு கூடும்போது புதிய அரசமைப்புக் கான நகல் வடிவம் அங்கு சமர்ப்பிக்கப்படலாம்' என சுமந்திரன் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழில் வந்த செய்தியைச் சுட்டிக்காட்டிய அவர்கள், சுமந்திரனை ஒரு பிடி பிடித்தனர்.

*"புதிய அரசமைப்புக்கான நகல்யாப்பு ஒன்றைத்தயாரிக்கும் நிலையைஎட்ட முன்னர்சுமந்திரன் எவ்வாறு அப்படிக் கூறமுடியும்?"*

– என அவர்கள் பாய்ந்தனர்.

ஆனால்வழிகாட்டல்குழுவின் கடைசிக் கூட்ட அறிக்கையைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அத் தகைய நகல் ஒன்றுடன் அடுத்த கூட்டத்தைக் கூட்டுவது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார். அதனையே தாம் ஊடகப் பேட்டி யில் கூறினார் என்றார் அவர்.

*"நிபுணர்கள் தயாரிக்கும் வடிவத்தை புதிய அரசமைப்புக் கான நகல் என்று கூறமுடி யாது. அதனைவழிகாட்டல்குழுமுதலில் பார்த்து நகல் வடிவ மாக அதைக் கருதலாம் எனத் தீர்மானித்த பின்னர்தான் அதனை புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் என்று அழைக்கலாம். "* – என அவர்கள் விடாப்பிடியாக வாதிட் டனர்.

நிலைமையைச் சமாளிக்க பிரதமர் ரணில் ஒரு மாற்று யோசனைத் தீர்வை முன்வைத் தார்.

*"சரி, அதனை புதிய அரசமைப் புக்கான நகல் வடிவம் என்று இப் போதைக்கு அழைக்க வேண்டாம். நிபுணர்கள் தயாரித்து வழங்கும் அந்த தஸ்தாவேஜை, 'புதிய அரசமைப்புக்கான நகலுக்குரிய ஆவணம்' என்று அழைப்போம்."* – எனக் கூறி நிலைமையைச் சமாளித்தார் பிரதமர்.

நேற்று வழிகாட்டல் குழுவில் பொ.ஜ.முன்னணியினர் என்ற தரப்பில் வந்த ஐவரும் நடந்து கொண்ட விதத்தைப் பார்க்கும் போது, புதிய அரசமைப்பு உரு வாக்க முயற்சிக்கு அவர்கள் இணங்கப் போவதில்லை என்பது தெளிவு என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

எனினும், அதைத் தாங்கள் எதிர்க்கின்றார்கள் என்று அவர்கள் வெளிப்படையாக அறிவிக்க மாட்டார்கள் எனவும் –

இடக்கு, மடக்காகப் பேசி, முட்டுக்கட்டை போட்டு அதை நகர விடாது தடுப்பதில் அவர்கள் குறியாக இருப்பார்கள் எனவும்–

அந்த வட்டாரங்கள் உறுதிபடக் கூறுகின்றன.

அப்படியானால் புதிய அரசமைப்பு வருமா, வாராதா? *'வரும்...; ஆனால் வராது!'* – இது தான் சரியான பதிலாக இருக்கும்.

**-மின்னல்-**


## 20 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாக இது இன்று சபையில் சமர்ப்பிக்கப்படும்.

அதற்கு முன்னதாக, மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தைத் திருத்துவதற்கு வழி செய்யும் விதத்தில் அரசுத் தரப்பினால் கொண்டு வரப்பட்டு, பின்னர் உயர்நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து முன்னெடுக்கப்படாமல் இருக்கும் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தப் பிரேரணை வாபஸ் பெறப்படுகின்றது என்ற அறிவிப்பை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சபை கூட்டி யதும் விடுப்பார் என எதிர்பார்க் கப்படுகின்றது.

அதனையடுத்து ஜே.வி.பியின் மேற்படி தனி நபர் பிரேரணை அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் என்ற தலைப்புடன் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிய வந்தது.

# 7 மாணவிகளுக்குத் தொந்தரவு: ஆசிரியர் பொலிஸாரால் கைது



யாழ்ப்பாணம், மே 25

தெல்லிப்பளையில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 7 இல் கல்வி கற்கும் 12 வயது மாணவிகள் ஏழு பேருக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரிய ரொருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

நீண்ட நாள்களாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் 7 மாணவிகளையும் கணித ஆசிரியரான இவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளா கியுள்ளமையுடன், இது தொடர்பில் எவருக்கும் தெரிவிக்கக்கூடாது என மாணவிகளை அச்சுறுத்தி வந்தார் எனவும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவியொருவர் பெற்றோருக்கு அறிவித்துள்ளார். மாணவியின் பெற் றோர் ஆசிரியருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபரான ஆசிரியர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். (ஐ)

## மங்களவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வதற்கு மஹிந்த அணி தீர் மானித்துள்ளது.

அரசநிதியை முறையற்ற விதத் தில் பயன்படுத்துகிறார் என்றும், தனது அதிகாரத்தைப் பயன் படுத்தி விளம்பரங்களுக்காகப் பெருந்தொகைப் பணம் செல விடுகின்றார் என்றும் சுட்டிக்காட்டி, மேலும் சில குற்றச் சாட்டுகளின் அடிப்படையிலேயே மேற்படி முறைப்பாடு தாக்கல் செய்யப் படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த முடிவெ டுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செய லாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய இருவர் தொடர்பிலும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தீவிர பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார்.

இலங்கையில் வெள்ளை வான் கடத்தலை கோட்டாபயவே அறிமுகப்படுத்தினார் எனவும், சட்டவிரோதக் கொலைகளுக்குப் பின்னால் இவரே இருக்கிறார் எனவும், இவர் மோசமான அரச நிர்வாகி எனவும் மங்கள விமர் சித்திருந்தார்.

அத்துடன், மஹிந்தவையும் பகிரங்க விவாதத்துக்கு அழைத் துள்ளார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மஹிந்த அணி, அமைச்சர் மங்களவைக் குறி வைத்துள்ளது. (ஐ)

## கோப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கோண்டாவில் நவரட்ணராஜா வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ராசரட்ணம் என்பவரே உயிரிழந் துள்ளார் எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்த முதியவர், கோப்பாய் சந்தி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பின்புறமாகவந்தகன்ர்வாகனம் மோதியுள்ளது. படுகாயமடைந்த நிலையில் கோப்பாய் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயி ரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்தி யசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்துச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

## லண்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) லிபரல் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட இவர் பெருமளவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இவர் போட்டியிட்ட லிபரல் கட்சி 39 ஆசனங்களை யும், எதிர்த்துப் போட்டியிட்ட கொன் சவேட்டிவ் கட்சி 9 ஆசனங்களை யும் பெற்றுக் கொண்டன.

இந்த நிலையில், கிங்ஸ்ரன் நகரத்தின் 183ஆவது மேயராக வைத்தீஸ்வரன் தயாளன் பதவியேற்றார். இதற்கு முன்னர் இவர் கிங்ஸ்ரன் நகரசபையின் உறுப்பினராக இருந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் தெல் லிப்பழையைச் சேர்ந்தவர். 40 ஆண்டுகளாகபிரிட்டனில்வசித்து வருகின்றார்.

இன சமத்துவத்துக்கான அமைப்பு, தமிழர் துடுப்பாட்டக் கழகம் உள்ளிட்ட சங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்துள் ளார். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பகால நிர்வாகச் செயலர் ரி.எம்.சி.வைத்தீஸ் வரனின் மகன் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்ன தலைமையில் இந்த வழிகாட்டல் குழுவின் கூட்டம் நடைபெற்றது.

அரசமைப்பு உருவாக்கத் துக்கான நகல் வடிவத்துக்குரிய ஆவணம் தயாரிக்கும் பணி இன்னும் பூர்த்தியாகவில்லை என நிபுணர்கள் தரப்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

நிபுணர்கள் குழு தயாரிக்கும் ஆவணத்தை, 'நகல் யாப்பு' என்று அழைக்காமல், 'நகல் யாப்புக்கான ஆவணம்' என்று அழைப்பது என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

நேற்றைய கூட்டத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் வழிகாட்டல் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டு பல பிரிவு களிலும் பிரிந்து நிற்கும் – அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா, டிலான் பெரேரா, பிர சன்ன ரண துங்க, தினேஷ் குண வர்த்தனா, சுசில் பிரேமஜயந்த ஆகிய ஐவருமே சமுககமளித் திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

புதிய அரசமைப்பு உருவாக் கத்துக்கான முயற்சி முன்னெடுக் கப் படுகையில் நிறைவேற்று அதி கார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான தனியான அர சமைப்புத் திருத்தப் பிரேரணை ஒன்றை ஏன் ஜே.வி.பி. கொண்டு வரவேண்டும் என்று அமைச்சர் மனோ கணேசன் நேற்றைய கூட்டத்தில் கேள்வி எழுப் பினார்.

வழிகாட்டல் குழு ஊடாக முன்னெடுக் கப்படும் இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி வெற்றி பெறும் – சாதக மான திசையை நோக்கி நகரும் – என்ற நம்பிக்கை தமக்குக் கிடையாது எனத் தெரிவித்த ஜே.வி. பி.பிரதிநிதிகள், அதனால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை யாவது நீக்கும் முயற்சியைத் தாங்கள் தனி யானதாக ஆரம்பித்திருக்கின் றனர் என்றும் கூறினர். (உ)


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம், மாதகல்

## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| **வட்டாரம்:** | **10** |
| **உத்தேச ஆதன இல:** | **27/12** |
| **வீதி:** | **சாந்த ஜேம்ஸ் வீதி, முதலாம் ஒழுங்கை** |
| **கிராம சேவையாளர் பிரிவு:** | J/156 |

வட்டாரம் 10, சாந்த ஜேம்ஸ் வீதி முதலாம் ஒழுங்கை, ஆதன இல. 27/12 இல் இவ் ஆத னம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு தற்போது தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை "கூகைமாவடி" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 1 குழி 6.15 கொண்ட இவ்வாதனம் இளவாலை சென்ஜேம்ஸ் யோசேப்பு கைம்பெண் யக்கோவா ஆகிய இவர்களால் அவ்வூர் ஜேம்ஸ் ஜெலான் கலிஸ்ரஸ் அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு. ந.தம்பிமுத்தன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 7699ஆம் இலக்க 04.09.2010ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டதரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு.A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 1971ஆம் இலக்க 31.07.2010ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதன மானது "கூகைமாவடி" நிலப்பரப்பு 1 குழி 6.15 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற் றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங் களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜேம்ஸ் ஜெலான் கலிஸ்ரஸ் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை யும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.




**சாந்த ஜேம்ஸ் வீதி, முதலாம் ஒழுங்கை**

**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதித்துறைக்காக உழைத்தவர்

யாழ்ப்பாணம் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இருந்தபோது – யுத்தத்தில் சிக்குண்டு பேராபத்தில் மூழ்கிக் கிடந்த போது – இங்கு துணிச்சலுடன் பணியாற்ற வந்த நீதித்துறை அதிகாரி நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன்.

யுத்தம் முடிவடைவதற்கு முந்திய மூன்று தசாப்தகால வட பகுதி வாழ்க்கை வேறு. யுத்தம் முடிவுற்ற பின்னர் – கடந்த சுமார் பத்தாண்டு காலம் – இங்கு கட்டவிழும் வாழ்க்கைச் செயற்பாடுகள் வேறு.

நமது பிரதேசத்தில் நட்ட நடுநிசியிலும், நடுவீதி வழியே சாதாரண நகைகளோடு ஓர் இளம்பெண் பாதுகாப்பாக நடந்து செல்லக்கூடிய ஒரு நிலைமை நம் மத்தியில் இருந்தது. நம்மை நாமே நெறிப்படுத்திக் கொண்டு வாழ்ந்த காலம் அது.

ஆனால் அதற்குப் பின்னர், 1996 நடுப்பகுதியில் யாழ் மாவட்டம் முழுதாக அரச படைகளினால் கைப்பற்றப்பட்டு, சிவில் நிர்வாகம் மீளத் தலையெடுக்கத் தொடங்கியதாகக் கூறப்படும் காலம் மிக மோசமானது.

ஊரடங்கு வேளையில், நள்ளிரவு சமயத்தில் வகை, தொகையின்றிச் சீருடையினரால் கடத்திச் செல்லப்பட்ட பல நூற்றக்கணக்கான தமிழர்கள் – குறிப்பாக நம் இளைஞர்கள் – 'காணாமல் போனவர்கள்' என ஆக்கப்பட்டனர்.

அப்படி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உடலங்கள் பரந்த செம்மணி வெளியில் புதையுண்டு போனதாகவே நம்புகிறோம்.

அந்தக் கொடூரங்கள் பற்றிய ஒரு சில தகவல்கள் ஆங்காங்கே கசிந்தபோது செம்மணிப் புதைகுழியைத் தோண்டும் எத்தனங்கள் சட்ட ரீதியாக ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், அச்சமயம் போராளிகளுக்கும், சிவில் நிர்வாகத்தை நிலைநிறுத்த முயன்ற படைத்தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்று வந்த மோதல்களால் – சண்டைகளால் – யாழ்ப்பாணத்துக்குப் பணியாற்ற வந்த நீதிவான்கள், நீதிபதிகள் எல்லோரும் பணிப் பொறுப்பை ஏற்ற ஓரிரு நாளிலேயே, கடமையாற்றாமல் ஜாகா வாங்கும் போக்குத் தொடர்ந்தது.

அப்படி நீதிபதிகள் வரிசையாக விலகிக் கொண்ட சமயத்தில்தான் செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும் பணியைப் பொறுப்பேற்கும் துணிச்சலுடன் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்தார் நீதிபதி இளஞ்செழியன்.

பலரும் அஞ்சிய பணிகளை அவர் துணிச்சலுடன் அன்று ஏற்றுக் கொண்டு, மிக உறுதியுடன் முன்னெடுத்து, நீதி, நியாயமாக உத்தரவுகளையும் தீர்ப்புகளையும் வழங்கி, பலராலும் மெச்சிப் போற்றப்படும் நிலைமைக்கு உயர்ந்தார் எனின், அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்களைக் கூறமுடியும்.

ஒன்று – நீதித்துறை தொடர்பான அவரது திறமை, நீதிபதிகளுக்கே உரித்தான துணிச்சல், பக்கம் சாராமை, சமூக நலன் நோக்கிய பார்வை, விருப்பு – வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடு எனப் பலவற்றைப் பட்டியலிடலாம்.

இரண்டாவது – இதுதான் முக்கியமானது. போரில், யுத்தத்தில், நேரடியாகச் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே அவரது நடுநிலைத் தன்மை, நேர்மை, பக்கம் சாராமை, நீதியான போக்கு ஆகியவை தொடர்பில் கொண்டிருந்த சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட நம்பிக்கை.

கடும் யுத்தத்துக்கு மத்தியிலும் – போராளிகளும் அரசு படைகளும் நித்தமும் மோதிக் கொள்ளும் ஒரு யுத்த பூமியில், சச்சரவுகளுக்கு அப்பாற்பட்டு ஒருவர் நீதித்துறைச் சேவையைப் பின்வாங்காமல், நடுநிலையாக ஆற்ற முடிந்தது என்றால் அதற்குப் பிரதான காரணங்கள் அவர் மீது சகல தரப்பினரும் வைத்த நம்பிக்கை, மரியாதை, உயர்வான எண்ணம் என்பவைதான்.

இப்போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து திருகோணமலை நீதிமன்றுக்கு மாற்றலாகிச் செல்லும் அவரை யாழ்ப்பாண சமூகம் விதந்துரைத்து நின்றாலும், யுத்த காலத்தின் பின்னரான அவரது பணி குறித்தே பலரும் சிலாகிக்கின்றார்கள். ஆனால் 90களின் இறுதியிலேயே – யுத்தத்துக்கும் மத்தியில் – துணிச்சலுடன் அவர் ஆற்றிய பணி, போராளிகள் உட்பட பல தரப்பினராலும் மெச்சி, விதந்துரைத்து மதிக்கப்பட்டது என்பதை பலரும் மறந்து விட்டார்கள்.

தமிழர் பிரதேசத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி, சீரிய பண்பியல்புகளை நிலைநிறுத்துவதற்கு இங்கு நீதித்துறையை செப்பனிடுவது மிக முக்கியமாகும். அதற்காகப் பணியாற்றிய ஒருவரின் சேவையைப் பாராட்டும் அதே சமயம் இங்கு ஒரு விடயத்தை சுட்டிக் காட்டுகின்றோம்.

பதின்ம வயது மற்றும் இளைஞர்களின் குற்றங்கள் பற்றித்தான் இப்போது இங்கு அதிகம் பேசுகிறோம். அதுதான் பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது.

ஆனால், சந்தேகத்தின் பேரில் பொலிஸரால் வகை, தொகையின்றி அள்ளப்படும் பதின்மவயதினர் மற்றும் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்படும் போது, 'ஒரிஜினல் கிரிமினல்களுடன்' தொடர்புகள் ஏற்படுகின்றன என்றும் –

அதனாலும், ஒரு 'குற்றவாளிகள் சமூகம்' உற்பவிக்கின்றது என்றும் –

வேதனை கலந்த குற்றச்சாட்டு ஒன்று நம் சமூகத் தலைவர்கள், சிந்தனையாளர்கள் மட்டத்தில் உண்டு.

நம்மைப் பிரித்து செல்லும் நீதிபதி இளஞ்செழியனை வாழ்த்தும் அதேசமயம், இந்த முக்கிய விடயத்தை இங்குள்ள நீதித்துறையினரின் பரிவான கவனத்துக்கும் முன்வைக்கிறோம்.

# 3000 மாற்றுத்திறனாளிகள் உள்ளபோதும் 34 பேருடன் மட்டும் புதிய நிர்வாக தெரிவு

## கிளிநொச்சி மாற்றுவலுவுள்ளோர் சங்கம் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் நிர்வாககுழு உறுப்பினர்கள், பிரதேச மட்ட உறுப்பினர்கள் அனைவரையும் விசேட கலந்துரையாடல் ஒன்றுக்கு வருமாறு மூலம் அழைத்து 3000 பேர் உள்ள இடத்தில் யாப்புக்கு மாறாக கோரமின்றி 34 பேருடன் புதிய நிர்வாகத்தை மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் தெரிவு செய்துள்ளது என மாற்று வலுவுள்ளோர் சங்கத்தின் முன்னாள் தலைவரான ஆ. சிவநேசன் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மட்ட உறுப்பினர்களை கடந்த திங்கள்கிழமை காலை 10 மணிக்கு மாவட்ட சமூக சேவைகள் திணைக்கள அலுவலகத்தில் மாகாணப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலுக்கு வருமாறு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

இதற்கமைவாக மாவட்டத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாற்றுவலுவுள்ளோர் உறுப்பினர்களாக உள்ள இடத்தில் நிர்வாக உறுப்பினர்களும், பிரதேச மட்ட உறுப்பினர்களும் எனச் சுமார் முப்பது பேர் கலந்துரையாடலுக்குச் சென்றிருந்தோம். ஆனால் அங்கு விசேட கலந்துரையாடலுக்குப் பதிலாகக் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவினை மேற்கொண்டனர்.

இதற்கு நாம் எங்களுடைய கடுமையான எதிர்ப்பினை வெளிப்படுத்தினோம். மூவாயிரம் பேர் உள்ள இடத்தில் முப்பது பேருடன் புதிய நிர்வாகத் தெரிவு மேற்கொள்ள முடியாது. இது சட்டவிரோதமானது. அத்தோடு கோரமும் இல்லை. எனவே தாங்கள் எம்மை எழுத்து மூலம் என்ன நோக்கத்திற்காக அழைத்தீர்களோ அதனை மேற்கொள்ளுங்கள். புதிய நிர்வாகத்தை தெரிவை மேற்கொள்ள வேண்டாம். புதிய நிர்வாகத் தெரிவு மேற்கொள்ள வேண்டுமாயின் 14 நாட்களுக்கு முன் அறிவித்தல் விடப்பட்டு பெரும்பாலன உறுப்பினர்களின் பிரசன்னத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியோடு எதிர்ப்பினையும் வெளியிட்டோம்.

இருப்பினும் எமது கோரிக்கையினையும், எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது மாகாண சமூக சேவைகள் பணிப்பாளரின் முன்னிலையில் சட்ட விதிமுறைகளுக்கு மாறாகப் புதிய நிர்வாகத்தை மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் மேற்கொண்டுள்ளார். – என்றார்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட சமூகசேவைகள் அலுவலர் வே. தபேந்திரனை வினவியபோது

விசேட கலந்துரையாடலுக்காகவே எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது. ஆனால் வருகை தந்தவர்கள் புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விட்டமைக்கு அமைவாகத் தாம் புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொண்டதாகக் கூறினார்.

யாப்புக்கு மாறாக கோரம் இன்றி புதிய நிர்வாகத் தெரிவை மேற்கொண்டதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டு தெடர்பில் அவரிடம் வினவியபோது –

மூவாயிரம் பேர் மாவட்டத்தில் மாற்று வலுவுள்ளோராக உள்ள போதும் சுமார் முன்னூறுக்கு மேற்பட்டவர்களே அங்கத்தவர்களாக உள்ளனர். இதில் கடந்த திங்கள் 36 பேர் வரை கலந்து கொண்டனர். மேலும் கடந்த 2016 ஆம் ஆண்டு தலைவர் தெரிவும் கோரமின்றியே இடம் பெற்றது. – என்றார். (ஐ)

# அமைச்சர் ரிசாத்தின் கரங்களை தொடர்ந்து பலப்படுத்துவேன்



## எம்.பி. பதவியை இராஜினாமா செய்த நவவி அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான் இராஜினாமாச் செய்துள்ள போதும், கட்சிக்கும் தலைமைக்கும் தொடர்ந்தும் விசுவாசமாகவே இருப்பேன்.

– இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நவவி தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து அந்தப் பதவியிலிருந்து நேற்று முன்தினம் இராஜினாமாச் செய்த நவவி மேலும் கூறியுள்ளதாவது: –

கடந்த பொதுத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு சுமார் 33,000 வாக்குகளைப் பெற்றுக்கொண்டேன். சுமார் 1000 வாக்குகள் வித்தியாசத்திலேயே எம்.பி. பதவியை இழந்தேன்.

எனினும், தேர்தல் காலத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எனக்கும், எனது ஆதரவாளர்களுக்கும் வாக்களித்ததற்கு அமையவும் புத்தளம் மண்ணைக் கௌரவிக்கும் வகையிலும் புத்தளம் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இழக்கப்பட்டு வந்த முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஈடுசெய்யும் வகையிலேயும் கட்சிக்குக் கிடைத்த ஒரே ஒரு தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை எனக்கு வழங்கி புத்தளம் மண்ணைக் கௌரவித்தார்.

அதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் முதற் கண் இறைவனுக்கும், கட்சியின் தலைமைக்கும், கட்சியின் உயர்பீடத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒன்றரை வருட காலத்திற்கே எனக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டது. எனினும், அதற்கு மேலதிகமாக நான் சுமார் இரண்டரை வருடகாலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க இறைவன் அருள் புரிந்துள்ளான்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமது கட்சி, சொற்ப வாக்குகளால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வேறு சில மாவட்டங்களிலும் இழந்திருந்தது.

அம்மாவட்டங்களுக்குப் பிரதிநித்துவத்துக்கான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலும், தலைமைக்கு மதிப்பளித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நான் இராஜினாமாச் செய்துள்ளேன்.

எனது இந்தப் பதவிக் காலத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வழிகாட்டலில் புத்தளம் மாவட்டத்திற்கு அபிவிருத்தி மற்றும் இன்னோரன்னப் பணிகளைச் செய்துள்ளேன் என்பதில் மனத்திருப்திக் கொள்கின்றேன்.

நான் எம்.பி. பதவியைக் காலத்தின் தேவை கருதி இராஜினாமாச் செய்துள்ள போதிலும் தொடர்ந்தும் கட்சியின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழைப்பேன். அத்துடன், எங்கள் கட்சித் தலைவர் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கரங்களைப் பலப்படுத்துவேன் எனவும் இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் உறுதியளிக்கின்றேன். – என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## நாளை

26.05.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : சித்திரை மு.ப 10.07 வரை
திதி : துவாதசி மு.இ 7.17 வரை
சுபநேரம் : 2.52 – 4.22 வரை
இராகுகாலம் : 8.52 – 10.22 வரை

# மதிப்பீடுகள் தொடர்பிலான சர்வதேச மாநாடு கொழும்பில் செப்ரெம்பர் மாதம் இடம்பெறும்

கொழும்பு, மே 24

'இவால் கொழும்பு' (Eval Colombo) என்ற மதிப்பீடுகள் தொடர்பான சர்வதேச மாநாடு செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையில் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் மற்றும் நாடாளுமன்றக்கட்டிடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.



மதிப்பீடுகள் தொடர்பான உலக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 100 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் மதிப்பீடுகள் குறித்த துறைசார் நிபுணத்துவம் பெற்றோர் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இது தொடர்பில் உலக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஆனந்த குமாரசிறி கருத்து தெரிவிக்கையில்–

பாரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது போதிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமையால் பொது மக்களின் பணம் வீண்விரயமாகிறது.

எனவேதான், மதிப்பீடுகள் குறித்து நாடு முழுவதிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இது தொடர்பில் தேசிய கொள்கைத்திட்டமான்றைத் தயாரிக்கும் நோக்கிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு மாவட்டங்கள் தோறும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் மத்தியில் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்கின்றது. மதிப்பீடுகள் குறித்த தேசிய கொள்கைத்திட்டம் ஒன்றை தயாரிக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் மதிப்பீடுகள் தொடர்பான தேசியக் கொள்கையை அமைச்சரவையில் சமர்ப்பித்து, செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் மதிப்பீடுகள் குறித்த சர்வதேச மாநாட்டுக்கு முன்னர் அதனை அங்கீகரிப்பதற்கு எதிர்பார்த்திருக்கிறோம்.

மத்தள விமானநிலையம் மற்றும் உமா ஓயா போன்ற பாரிய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனாலேயே, திட்டங்களை அமைப்பதில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.- என்றும் மதிப்பீடுகள் தொடர்பான உலக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மேளனத்தின் தலைவர் ஆனந்த குமாரசிறி குறிப்பிட்டார்.

மதிப்பீடுகள் தொடர்பான நாடாளுமன்ற குழுவின் தலைவர் ஆனந்த குமாரசிறி, அதன் உறுப்பினர்களான மயந்த திசா நாயக்க, மயில்வாகனம் திலகராஜ், புத்திக பத்திரண மற்றும்தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் சிவ ஞானசோதி மற்றும் இலங்கை மதிப்பீட்டாளர் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் சமன் பண்டார ஆகியோர் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

(க)

## மின்தடை

யாழ்ப்பாணம்,மே 25

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ் மாவட்டம் முழுவதும், கிளிநொச்சி மாவட்டம்முழுவதும், முல்லைத்தீவு மாவட்டம் முழுவதும் வவுனியா மாவட்டம் முழுவதும், மன்னார் மாவட்டம் முழுவதும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ)



உயர் நீதிமன்ற நீதிபதி திருமதி ஈவா வனசுந்தர பதில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அவர் நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமானம் செய்துகொண்டார்.
ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் இதன்போது பிரசன்னமாகியிருந்.

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,மே 25

இருபாலை, கோப்பாய், கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தேரில் விநாயகர் ஆரோகணமும், அடுத்த நாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்ப்பாணம், கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்பாள் அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

தினமும் அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசையும், அம்பாள் வெளி வீதி உலாவும் இடம்பெறும்.

## மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினர் விளையாட்டு விழா

மூளாய், மே 25

மூளாய் இந்து இளைஞர், மன்றத்தின் 75 ஆவது ஆண்டை முனனிட்டு விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மரதன் ஓட்டத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும். நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சைக்கிள் ஓட்டமும் தொடர்ந்து பல களியாட்ட விளையாட்டுக்களும் இடம் பெறும். பரிசளிப்பு வைபவம் அன்று பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தலைவர் த.நடனேந்திரன் பிரதம விருந்தினராகவும், உப தலைவர் வே.சச்சிதானந்தன், பிரபல தொழிலதிபர் கல்விக் காருண்யன் திரு.ஈ.எஸ்.பி. நாகரத்தினம் மற்றும் தங்க.முகுந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

## சட்ட ஆலோசனை சேவை பிற்போடப்பட்டுள்ளது!

### சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச சட்ட ஆலோசனை சேவை காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பிற்போடப்பட்டுள்ளது என சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யு.ஆர்.டி.சில்வா கேசரிக்கு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நிலவிவரும் மோசமான காலநிலையின் காரணமாக இருநாள்கள் நடத்துவதற்கு தீர்மானித்திருந்த இலவசச் சட்ட ஆலோசனைச் சேவைகள் பிற்போடப்பட்டுள்ளன. சட்டப் பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனை என்பது மக்களுக்கு அவசியமானதாகும். எனவே தற்போதைய மழை மற்றும் வெள்ளம் என்பவற்றுக்கு மத்தியில் மக்களால் ஆலோசனை சேவையினைப் பெறுவதற்கு வருவது இயலாத காரியமாகும். ஆகையினாலேயே இச்சேவையை ஜூன் மாதமளவில் முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

வெள்ளம் காரணமாக அநேகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களின் சொத்துக்கள், உடைமைகள் சேதமடைந்துள்ளன. வீட்டுறுப்பத்திரம், காணி உறுதிப்பத்திரம் போன்ற முக்கிய ஆவணங்கள் வெள்ளம் காரணமாக அழிவுற்றிருக்கக் கூடும்.

எனவே, அவற்றை மீளப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டம் தொடர்பில் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான விவாத போட்டிகள் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறும்.

மேலும், தாம் வாழும் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் முறையாக மேற்கொள்ளப்பாதிருப்பின் அவை தொடர்பிலும் மக்கள் சட்ட ஆலோசனையை பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்படிவிவகாரங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்தல் மற்றும் உரிய நடவடிக்கையை மேற்கொள்வதற்கான வழிமுறை என்பவற்றை எம்மால் வழங்க முடியும். தேசிய நீதி வாரத்தை முன்னிட்டு இவ்வாறான செயற்பாடுகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பதன் மூலம் மக்களுக்கு சட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடிவதுடன், சட்டத்துறையில் மக்களின் ஈடுபாட்டை அதிகரிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## றமழான் சிந்தனை



உங்களிடம் ஒரு மாதம் வந்திருக்கின்றன. அதில் ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவான லைலத்துல் கதிர் இரவின் நன்மையை எவர் இழந்து விடுகின்றாரோ அவர் துர்பாக்கியம் உடையவராவார்.

நூல் - இப்னுமாஜா

| ஸஹர் | சுபஹ் |
|---|---|
| 4.18 | 4.33 |

மஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.21

# துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் பலி

கொழும்பு, மே 25
மட்டக்களப்புக் கித்துள் காட்டுக்குள் மிருக வேட்டைக்குச் சென்றவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு கித்துள் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய கருப்பையா ராமகிருஷ்ணன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த நபர் துப்பாக்கியுடன் மிருக வேட்டைக்குச் சென்றபோது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் தொடைப் பகுதியில் குண்டு பாய்ந்தது அவர் செங்கலடி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற நிலையில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் செங்கலடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருக்கிறது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தினசரி ராசி பலன் (25.05.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 11 ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஏகாதசித்திதி மாலை 5.47 மணி வரை பின்னர் துவாதசி. நட்சத்திரம்: அத்தம் இரவு 7.59 மணி வரை. பின்னர் சித்திரை. அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 10.33 மணி முதல் 12.07 மணி வரை.

**சுபநேரம்** - காலை 5.52 மணி முதல் 7.21 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத வளர்பிறை ஏகாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - அத்தம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அமைவதைக் கண்டு மகிழ்வார்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை உயரும்.

**ரிஷபம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு மத்திமமாக இருக்கும். குடும்பத்தில் மருத்துவச் செலவுள் உண்டாகும். பிறர் விஷயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்** யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பத்தில் அமைதி குன்றும். சகோதர வழியில் மனக்கசப்பு ஏற்பட்டு விலகும். கவனமுடன் செயற்படட வேண்டும். அதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரும்.

**கடகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். தேவையில்லாத பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்வது நல்லது.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளுக்கான பேச்சுக்கள் நடக்கும். சகோதர உறவு வலுவடையும். பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றமடைவார்கள்.

**கன்னி** விருத்தியான நாள். பொருளாதாரம் வளர்ச்சியடையும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். தொழிற் பிரிவினர் உழைப்பிற்கேற்ற ஊதியம் பெறுவார்கள். வியாபாரம் நன்கு அபிவிருத்தியடையும்.

**துலாம்** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். செலவுகள் அதிகரிக்கும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவரை நாட வேண்டிவரும்.

**விருச்சிகம்** அதிர்ஷ்டமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு தொழில் கிடைத்து வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக்கள் வரும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும்.

**தனுசு** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனம் எடுக்க வேண்டி வரும். வியாபாரத்தில் சமலாபம் கிடைக்கும்

**மகரம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டு.

**கும்பம்** சலனம் மிகுந்த நாள். பொருளாதாரம் நலிவடையும். உடல்நலம் பாதிப்படையும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். சுய தொழிலில் நட்டம் உண்டாகும். மாணவர்களுக்கு ஞாப சக்தி குறையும்.

**மீனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சமமாக இருக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு, அலைச்சல் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**சந்திராஷ்டம நாள்: அவிட்டம் 3 ஆம், 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1 ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கிளிநொச்சி மகா வித்தியாலய தளபாடங்களுக்கு நிதி உதவி




கிளிநொச்சி, மே 25
நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் வேண்டுகோளுக்கு இணங்க கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்கு ஒரு தொகை தளபாடங்களுக்கான நிதியைக் கரவெட்டிப் பிரதேச சபையின் தவிசாளர் ஐங்கரன் நேற்று வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் உயர் தர மாணவர்கள் இட நெருக்கடிகளையும் தளபாட பற்றாக்குறையையும் எதிர்கொண்டு வந்த நிலையில் பாடசாலை அதிபர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கத்தினால் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து கரவெட்டி பிரதேச சபையின் தவிசாளர் ஐங்கரன் தனது சொந்த நிதியில் இருந்து ஒரு லட்சம் நேற்று வழங்கி வைத்தார்.

இவ் நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனும் கலந்து கொண்டிருந்தார். (உ)

# தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் தமிழ் அமுதம்

தென்மராட்சி இலக்கிய அணியினர் முன்னெடுக்கும் தமிழ் அமுதம் பத்தாவது நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க் கோட்ட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக பொருளியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.எஸ்.எஸ்.உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் சாவகச்சேரி தபால் நிலைய தபாலதிபர் திரு.திருமதி. அ.இன்பராஜ் தம்பதியினர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பர்.நிகழ்வில் கடவுள் வாழ்த்தை ஸ்ரீ.சாகரா இசைக்க, வண்ணக்கோலங்கள் எனும் பொருளில் ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வு இயல் பேராசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழிலுரை ஆற்றவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து 'அறம் நிலைப் பதற்குப் பெரிதும் காரணமாக அமைவது ஆண்களின்அறிவா? அல்லதுபெண்களின்உணர்வா?'- என்ற சிறப்புப் பட்டி மண்டபம் இடம்பெறவுள்ளது.பட்டிமண்டப நடுவராக யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை வாழ் நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கடமையாற்றவுள்ளார். 'ஆண்களின் அறிவே'- என ந.விஜயசுந்தரம், செ.செல்வரமணன், க.கரு ணாகரன் ஆகியோரும், 'பெண்களின் உணர்வே'- என த.நாகேஸ்வரன், அ.வாசுதேவா,கே.கஜரூபன் ஆகியோரும் வாதாடவுள்ளனர். (உ- 21)

# தண்ணீர்த் தேவை பூர்த்தியாக்கப்பட்டது




கிளிநொச்சி, மே 25
கிளிநொச்சி ரயில் நிலையத்தைச் சூழ வசித்து வருகின்ற இருபதுக்கு மேற்பட்ட மக்கள் குடிதண்ணீர் பெற்றுக்கொள்வதில் கடந்த சில வாரங்களாக சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

இவ் விடயம் கரைச்சி பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து நேற்றுமுன்தினம் அவ்விடத்தை நேரில் சென்ற கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் மற்றும் உறுப்பினர் ஐ. மோகன்ராஜ் ஆகியோர் நிலைமையைப் பார்வையிட்டனர்.

இதனையடுத்து குறித்த கிணறு இறைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு உரித்தாக்கப்பட்டது.




கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்தில் இருந்தும் தமிழுக்கும் மொழி பெயர்த்த 'மைசொய்ஸ்' மற்றும் 'சுதந்திரம்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். இரு நூல்களின் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் சி.திசைவீரசிங்கம் பெற்றுக் கொள்கின்றமையும், கவிஞர் சோ. பத்மநாதன் அங்கு உரையாற்றுகின்றமையையும் படங்களில் காணலாம்.

# போலி குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரணைகளை நடத்துங்கள்!

## பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் ஹிஸ்புல்லாஹ் கோரிக்கை!

கொழும்பு, மே 26

மட்டக்களப்பு, வாகரை வடக்குபிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது தன் மீது சுமத்தப்பட்ட போலி குற்றச்சாட்டு தொடர்பில் உரிய விசாரணை நடத்துங்கள் என நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் இணைத் தலைமையில் இடம்பெற்ற வாகரை வடக்குப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த ஒருவரால் இராஜாங்க அமைச்சருக்கு சொந்தமான இடத்தில் 'வடி சாராயம்' உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக தனியார் தொலைக்காட்சி ஒன்றின் இரவு நேர செய்தியில் உரிய ஆதாரமின்றி விவரங்கள் ஒளி பரப்புச் செய்யப்பட்டிருந்தன.



இந்த விடயம் தொடர்பிலேயே உடனடி விசாரணை நடத்துமாறு இராஜாங்க அமைச்சர்கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாகரையில் சட்ட விரோத செயற்பாடுகள் இடம்பெறுகிறது என்றும் 'வடி சாராயம்' தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது என்றும் அதனால், பலர் அந்தப் பகுதியில் இறந்துள்ளனர் எனவும் அண்மையில் இடம்பெற்ற வாகரை வடக்கு பிரதேச அபி விருத்திக் குழுக் கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான எந்த சட்ட விரோத நடவடிக்கைகளும், இடம்பெறவில்லை. மக்கள் மத்தியில் எனக்குள்ள நற் பெயரைக் கெடுப்பதற்காக இது திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்ட போலிப் பிரச்சாரமாகும். முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பொய்யான தகவல்களையும், - விசமக் கருத்துக்களையும் பரப்பி வருகின்ற ஓர் ஊடகம் இந்த விடயத்துக்கு உடந்தையாக இருந்துள்ளது. இந்த ஊடகம் அந்தச் செய்தியை உறுதிப்படுத்தாமல் வெளியிட்டுள்ளது.

மது பானம் என்பது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் அதை வெறுக்கின்றனர். இந்த நிலையில், இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளுடன் என்னை தொடர்புபடுத்தி பொய்ப் பிரசாரங்களைச் செய்வதன் ஊடாக முஸ்லிம் மக்களைக் குழப்பலாம் எனச் சதிகாரர்கள் கனவு காண்கின்றனர். அவர்களது எதிர்பார்ப்புகள் ஒரு போதும் நடக்கா.

இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணை நடத்துமாறு கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரிடன் வேண்டுகோள் விடுத்துள்ளேன். ஆதாரமற்ற கருத்தை முக்கியத்துவம் வாய்ந்த சபையொன்றில் தெரிவித்த நபர் குறித்து விசாரணை நடத்துமாறும் கோரியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிகரெட்டுகளை கடத்த முயன்ற நபர் கைது!

கொழும்பு, மே 25

குவைத் நாட்டிலிருந்து சட்ட விரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நேற்றுமுன் தினம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சந்தேக நபர் ஒருவர் சுங்கத்துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து சுங்க பிரிவின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவிக்கையில்–

குவைத்திலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இலங்கை வந்த இந்தச் சந்தேகநபர் வெளிநாட்டு சிகரெட்டுகளை தனது கைப் பையில் சட்டவிரோத மான முறையில் மறைத்து வைத்துக் கடத்த முயற்சிக்கையிலேயே இவ்வாறு சுங்க பிரிவின் பரிசோதனை அதிகாரிகளால் தடுத்து பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த 35 வயதுடைய ஆணொருவரே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறு சந்தேக நபரை கைதுசெய்யும் வேளையில் அவரிமிருந்து 30 ஆயிரம் சிகரெட்டுகளுடன் 150 சிகரெட் அட்டைப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் இலங்கைப் பெறுமதி 15 லட்சம் ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### அனர்த்தத்தில் பலியானவர்கள் தொடர்பில்

## தவறான தகவல்களை வெளியிடவேண்டாம்

கொழும்பு, மே 25

நாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் சில ஊடகங்கள் தவறான தகவல்களை வழங்கி வருகின்றன எனஅனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம் எஸ்.அமலநாதன் தெரிவித்தார்.

மின்னல் தாக்கம், மரம் முறிந்து வீழ்ந்தமை, வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு அல்லது நீரில் மூழ்கி மற்றும் மண்சரிவு என்பவற்றின் காரணமாக இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

எனினும் இவ்வாறு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சில ஊடகங்களில் தவறாக காட்டுக்கின்றனர். இவை தொடர்பில் அனைத்து ஊடகங்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்ற எண்ணிக்கையை ஊடகங்கள் சரியாக அறிவிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தப்போவ நீர்தேக்கத்தின் வான் கதவுகள் திறப்பு!

கொழும்பு, மே 25

புத்தளம் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக தப்போவ நீர்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனால், தப்போவ நீர்த் தேக்கத்திற்கு அருகில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

## குறைந்த வசதிகளையுடைய மக்களுக்கு ஜனாதிபதி தலைமையில் வீடு கையளிப்பு!

கொழும்பு, மே 25

கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதிகளையுடைய வீடுகளில்வாழ்ந்த மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட மாதம்பிட்டிய, ஹேனமுல்ல 'மெத் சந்த செவன' மாடி வீடமைப்புத் தொகுதியின் 722 வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

கொழும்பு நகரிலுள்ள குறைந்த வசதிகளையுடைய பின்தங்கிய நகர் பிரதேசங்களை நாகரிகமடைந்த பிரதேசங்களாக மாற்றியமைக்கும் பொருட்டு பெரு நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் நெறிப்படுத்தலில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படும் நகர புனர்வாழ்வு செயற்றிட்டத்தின் கீழ் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



இரண்டு படுக்கை அறைகளையும் ஏனைய அடிப்படை வசதிகளையும் கொண்ட ஒரு வீட்டுக்கான நிர்மாணிப்பு மற்றும் சேவை வழங்கல்களுக்கான செலவு 40 லட்சம் ரூபாவாகும்.

அத்துடன், 15 மாடிகளைக் கொண்ட இந்த வீடமைப்புத் தொகுதியின் மொத்த செலவு 288 கோடி 80 லட்சம் ரூபாவாகும்.

குடியிருப்பாளர்களின் வசதிக்காக மின்னுயர்த்தி, சனசமூக நிலையம் உள்ளிட்ட சகல வசதிகளையும் கொண்டதாக இந்த வீடமைப்பு தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

கொழும்பு நகரில் குறைந்த வசதிகளையுடைய பிரதேசங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு நவீன வசதிகளையுடைய நிரந்தர வீடுகளை வழங்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதனை நோக்காகக் கொண்டு நகர புனர்வாழ்வு செயற்றிட்டத்தினூடாக 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்து வீடமைப்புத் தொகுதியை மக்களிடம் கையளித்த ஜனாதிபதி அதனைப் பார்வையிட்டார்.

வீடமைப்புத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையமும் இதன்போது ஜனாதிபதியின் விசேட கவனத்துக்கு உள்ளானது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் வீடுகளைப்பெறும் பயனாளிகள் சிலருக்கு ஜனாதிபதி வீட்டுச் சாவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, ரவி கருணாநாயக்க, வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுமேத ரத்நாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

(கு)

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் வள்ளுவர் விழா ஞாயிறன்று

## நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்தும் திருவள்ளுவர் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் விரிவுரையாளர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மலையகக் கிராமிய நடனம், திருக்குறளும் முகாமைத்துவமும் என்ற பொருளில் அமைந்த ஆய்வரங்கம், கொட்டகலை ஆசிரிய கலாசாலை ஆசிரி யர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸும், சிறப்புரையை வள்ளுவரின் முற்போக்குச் சிந்தனைகள் என்ற பொருளில் கொட்டகல ஆசிரிய கலாசாலை அதிபர் சந்திரலேகா கிங்ஸ்லியும் ஆற்றவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியை தலைமையில் வள்ளுவர் வழி முகாமைத்துவம் என்ற பொருளில் ஆய்வரங்கம் இடம் பெறவுள்ளது. இதில் திருக்குறளில் திட்டமிடல் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளார் கலாநிதி சி.சிவேசனும், திருக்குறளில் ஒழுங்கமைத்தல் என்ற பொருளில் கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பாரதி கெனடி யும், திருக்குறளில் ஆட்சேர்ப்பு என்ற பொருளில் திறந்த பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வ.சிவலோகதாசனும், திருக்குறளில் வழிநடத்தல் என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணாவும், திருக்குறளில் கட்டுப்படுத்தல் என்ற பொருளில் கலாநிதி எம்.பி.எம்.இஸ்மாயிலும் உரையாற்றவுள்ளனர். ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வள்ளுவர் வழி முகாமைத்துவம் என்ற பெயரில் நூலாக வெளியிடப்படும். இதனை தமிழ்சங்கத்தின் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வெளியிட்டு வைப்பார்.

பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் தேர்வு தொடர்பான பரிசளிப்பு வைபவமும் இடம்பெறவுள்ளது. இதனை போட்டி இணைப்பாளர் விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் நெறிப்படுத்துவார். நிறைவு நிகழ்வாக கொட்டகலை ஆசிரிய கலாசாலையினர் வழங்கும் உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் என்ற பொருளில் அமைந்த நாட்டிய நாடகம் இடம்பெறும். இந்நாட்டிய நாடகத்திற்குரிய நட்டு வாங்கம் – விரிவுரையாளர் சுமித்தா பிரசாந்தன், பாட்டு – ஜெ.மதுசிகன், வயலின் – ப.சியாமகிருஷ்ணா, மிருதங்கம் – க.நந்த குமார் ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர். நன்றியுரையை பொதுச் செயலாளர் இ.சர்வேஸ்வராவும் நிகழ்ச்சித் தொகுப்பை சி.சிவஸ்கந்தசிறியும் ஆற்றுவர்.

(உ)

# லண்டனில் இந்தியத் தூதரகம் முன் புதனன்று கவனவீர்ப்புப் போராட்டம்





தூத்துக்குடியில் ஜனநாயக முறையில் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தவர்கள் மீதான மிலேச்சத்தனமான துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டமையைக் கண்டித்தும் ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரியும் லண்டனில் உள்ள இந்திய தூதரகத்தை முற்றுகையிட்டு புலம்பெயர் தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு லண்டனில் உள்ள இந்திய தூதரகம் தமிழர்களால் முற்றுகையிடப்பட்டு தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தின் ஆரம்பத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பலியான அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதை அடுத்து கவனவீர்ப்புப் தொடங்கியது. மாலை 6 மணிவரை கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது.

நாளை சனிக்கிழமையும் அங்கு பெரிய கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.



# திருக்குறள் தேர்வின் முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், பாடசாலைகளில் உயர்தரத்தில் தமிழ் கற்கும் மாணவர்களிடையே கடந்த 20 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடத்திய திருக்குறள் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி முதலாம் இடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவன் நி.சிவாஜனும், இரண்டாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ர.நிவேதாவும், மூன்றாம் இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி கோ.யனோவாவும், நான்காம் இடத்தை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவி யோ.நிவேதிதா மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவி ர.நிவோதினி ஆகியோரும் பெற்றுள்ளனர்.

இவர்களுடன் ஜே.ஜெறின் (வேலணை மத்திய கல்லூரி), வி.விக்னா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ,பி.ராதிகா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), ந.தேனுஜா (அளவெட்டி அருணோதயக் கல்லூரி) சு.சஞ்சிகா (மகாஜனக் கல்லூரி), க.நிதுசா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ப.சுதர்மினி (சங்கானை சிவப்பிரகாச வித்தி), சி.பவதர்ஜினி (இளவாலை மெய்கண்டான் ம.வி.), ,செ.கீர்த்தனா (யாழ்ரன் கல்லூரி) க.கிந்துா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி) ஆகியோர் திறமைச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச் சங்கமும் சிவகணேசன் புடைவையகமும் இணைந்து நடத்தவுள்ள வள்ளுவர் விழாவின்போது வழங்கப்படவுள்ளன எனத் தமிழ்ச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

தேர்விற்குத் தோற்றிய அனை வரது பெறுபேறுகளையும் தமிழ்ச் சங்கத்தின் இணையத்தளத்தில் (www.thamilsangam.org) பார்வையிட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# வற்றாப்பளை ஆலய தரிசனம்

முல்லைத்தீவு,மே 25

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் வைகாசி விசாகத்தன்று திங்கட்கிழமை நடைபெற உள்ளது.

இதை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் வற்றாப்பளை கோவிலுக்கு திருத்தல யாத்திரையை அன்று மாலை 6.30க்கு மேற்கொள்ள இருக்கின்றது.

ஆலயத்திற்குச் செல்ல விரும்பும் பக்தர்கள் தங்கள் விவரங்களை அலுவலகத்தில் முற்கூட்டியே பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

# அரச அச்சக நிறுவனத்திற்கு நவீன தொழில்நுட்பம்!

நாட்டில் பழமையான திணைக்களமான அரச அச்சக நிறுவனம் நவீன தொழில் நுட்பத்துடன் அபிவிருத்திச் செய்யப்படவுள்ளது.

உள்நாட்டலுவல்கள், வடமேல்மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன இதனைத் தெரிவித்தார்.

அச்சக திணைக்களத்தின் கீழ் இயங்கும் நிறுவனத்திற்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என்றும் அவர் கூறினார்.





# விளையாட்டு உபகரணம் வழங்கல்

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சென்ற ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் புலோப்பளை கிழக்கு சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 2017ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் கழகத்தின் வேண்டுகோளை ஏற்று விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நேற்று வழங்கப்பட்டன. பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் இது தொடர்பாக நிகழ்வு நடைபெற்றது இப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், உறுப்பினர்களான வீரவாகுதேவர்,கோகுல் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



கலாநிதி
இரத்தினம்
நித்தியானந்தன்

# அதிசயக் கோயில் அங்கோர்




**அங்கோர் காலம் - 9 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை**

அங்கோர் அல்லது கம்போஜாவை அனைவரும் ஏற்றுக் கொண்ட காலம் கி.பி. 802 முதல் 1432. இக்காலத்தில் கெமர் சாம்ராஜ்ஜியம் தனது நாட்டின் எல்லைகளைப் பெரும் அளவுக்கு விரிவுபடுத்தி கலை, பண்பாடுகளில் பல மகத்தானவற்றைச் செய்து உச்ச நிலையை அடைந்திருந்தது. தன்னை மன்னனாக இரண்டாம் ஜெயவர்மன் பிரகடனப்படுத்தியபோது தோன்றியது அங்கோர். அங்கோரின் தலைநகர் தோம்மை தைஸ்சா அழிக்கப்பட்டதும் அங்கோர் காலம் முடிவுக்கு வந்தது. தலைநகரங்களில் மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கு அங்கோர் காலம் உறுதியான அடையாளமாக இருக்கிறது.

கோயில் தூண்களிலும், அகழ்ந்தெடுத்த கலைப்பொருள்களிலும் சிற்பக் கலைகளிலும், நினைவுச் சின்னங்களிலும் மற்றும் பாலி மொழியில் உள்ள 900 கல்வெட்டுக்களிலும் வரலாறு, மூதாதையர் மரபு வரலாறு, காலவரிசை பற்றிய தகவல்கள் கிடைத்தன. மேலும் மன்னர்களின் பெருமை பற்றியும் கல்வெட்டுக்கள் விளக்கின. நிர்மாணிக்கப்பட்ட கோயில்கள் குறித்தும் புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்ட கோயில்கள் குறித்தும் தகவல்களும் கல்வெட்டுக்கள் மூலம் கிடைத்தன. அங்கோர் காலத்தைப் பற்றிக் கிடைத்த பெரும் அளவு சான்றுகள் இவை என்ற போதிலும் அங்கே நிலவிய அன்றாட மக்கள் வாழ்க்கை குறித்த தகவல்கள் அதிகமாக இல்லை.

ஐந்தாம் நூற்றாண்டில் பூனான் மாநிலத்தை ஆட்சி செய்த மன்னன் ஜெயவர்மன், சீனாவுக்கு அரசியல் தூதுவர்களை அனுப்பி வைத்தான். தான் மரணம் அடைந்த 681ஆம் ஆண்டு வரை முதலாம் ஜெயவர்மன் ஜென்லாவை ஆட்சி செய்தான். இரண்டாம் ஜெயவர்மன் ஆண்ட பகுதியிலிருந்து எந்தவித கல்வெட்டுகளும் கிடைக்காதமையால் அவனைக் குறித்து சிறிது அளவே அறிய முடிகிறது. கெமர் சாம்ராஜ்ஜியத்தை ஆண்ட முதலாம் ஜெயவர்மனின் சாதனைகளை அறிவதற்கு பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த சடோகாக்தோம் கல்வெட்டையே நம்ப வேண்டியிருக்கிறது.

கம்போடியாவின் வடமேற்குப் பகுதியில் கிடைத்த கல்வெட்டு (தற்போது பாங்காக் அருட்காட்சியகத்தில் உள்ளது) மிகவும் முக்கியமான ஒன்று. அதன் மூலம் வரலாறு பற்றிய உண்மைகள், இரண்டாம் ஜெயவர்மனின் ஆட்சி ஆகியவற்றைப் பற்றி அறிய முடிகிறது. கம்போடியாவுக் குத் திரும்பி வந்து தன்னை மன்னனாக பிரகடனப்படுத்தும் முன்பாகச் சிறிது காலம் ஜெயவர்மன் சைலேண்ட்ரா மரபைச் சேர்ந்த அரண்மனையில் தங்கி இருந்தான் என இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. அரேபிய வியாபாரியின் பிற்கால கூற்றுப்படி சைலேண்ட்ரா மரபைச் சேர்ந்த மன்னன் கிரேட் லேக் மற்றும் ஆற்றுப் பகுதியிலிருந்து கெமர் மீது திடீர் தாக்குதல் நடத்தியமை தெரியவருகிறது. அந்த மன்னனின் தலை துண்டிக்கப்பட்டு, சைலேண்ட்ர மரபினுக்கு கெமர் சாம்ராஜ்ஜியம் அடிமையானது. இந்தப் போரின்போது ஜெயவர்மன் சிறைக்கைதியாக இந்தோனிஷியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.



இவன் 795ஆண்டில் கம்போடியாவுக்கு திரும்பி வந்து இந்திரபுராவில் தனது தலைநகரை உருவாக்கினான். இதன் பிறகு இவன் தலைநகரத்தை மூன்று முறை மாற்றி அமைத்தான். இவ்வாறு தலைநகரை மாற்றி அமைத்தற்குச் சரியான காரணம் உறுதியாக தெரியவில்லை. தலைநகர்களில் ஓர் இடத்தின் பெயர் அரிஹராலயா (இன்றைய லோலோஸ்).

அங்கோர் நகரத்துக்கு வடகிழக்கே 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மகேந்திரமலைக்கு (இன்றைய பினோம் குகுலென்) தனது தலைநகரை பதினோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மாற்றித் தன்னை பிரபஞ்ச மன்னனாகப் பிரகடனப்படுத்திக் கொண்டான் இரண்டாம் ஜெயவர்மன்.

இந்த வரலாற்றுச் சம்பவம் 802ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்து, ஒருங்கிணைந்த கெமர் மாநிலம் இந்தோனிஷியாவிலிருந்து விடுதலை அடைந்ததையும் அங்கோர் காலம் ஆரம்பமானதையும் இது குறிக்கிறது.

அதே காலக்கட்டத்தில் இரண்டாம் ஜெயவர்மன் தேவராஜா என்ற ஒரு புதிய மதக் கோட்பாட்டை உருவாக்கினான். அதன் பிறகு தலைநகரத்தை மீண்டும் ரோலோசுவுக்கு மாற்றி வைத்து தான் மரணம் அடைந்த 850ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான்.



இக்காலம் முதற்கொண்டு ஒவ்வொரு மன்னனும் தேவராஜா மதக் கோட்பாட்டை வற்புறுத்தியவாறு தமது ஆட்சியைத் தொடர்ந்தனர். மலைக்கோயிலையும் கட்டத் தொடங்கினர். வெற்றி பெற்ற மன்னன் தனது நாட்டின் செழுமையை மேம்படுத்தித் தனது மரபு வழி வந்தவர்களுக்கு ஒப்படைத்தான். மன்னனின் பாதுகாப்பு வலிமை எங்கும் சர்வ வல்லமையுடன் திகழ்ந்து மக்களுக்கும், மாநிலத்துக்கும், நீதி பரிபாலனத்துக்கும் அரணாக விளங்கியது. இதே காரணம் அடுத்து வந்து ஆட்சி செய்த மன்னர்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் வர்மன் என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொள்ளும் அளவுக்கு முக்கியம் பெற்றது. வர்மன் என்றால் பாதுகாவல் அல்லது பாதுகாவலன் என்று அர்த்தம்.

மாநிலக் கோயிலைத் தவிர்த்து ஒரு மன்னன் தனது மூதாதையர்களுக்காகவும் கோயிலும் ஏரியும் கட்டினான்.

பெண்களுக்குச் சம உரிமையும் மரியாதைக்குரிய இடமும் கம்போடிய சமூகத்தில் வழங்கப்பட்டிருந்தத் திருமணத்தின் வழியாக அரசாள்வோரின் மரபு வழி தொடர்பும் ஏற்பட்டது. பரம்பரைச் சொத்து முதலானவை பெண் வழியே மாற்றப்பட்டன. அங்கோர் காலத்தில் பெண்கள் அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தனர். பெண்கள் கெமர் சாம்ராஜ்ஜியத்தின் பொருளாதாரக் கட்டமைப்புக்கு முக்கியமாக விளங்கினர்.

இரண்டாம் ஜெயவர்மனுக்கு அடுத்து வந்த மன்னர்களும் கெமர் சம்ராஜ்ஜியத்தை ஒருங்கிணைத்து விரிவுபடுத்தினர். முதலாம் இந்திரவர்மன் (877-899) ரோலோஸ் நகரில் பெரிய ஏரியைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்து வயல்களில் நெல் சாகுபடிக்குத் தண்ணீர் பாய, கால்வாய்களும் வெட்டினான்.

முதலாம் பசோவர்மன் (889 - 900) தமது மூதாதையர்களுக்காக லோலோசில் கோயில் ஒன்றைக் கட்டினான். பிறகு தனது தலைநகரை அங்கோருக்கு மாற்றினான். இது அடுத்த 500 ஆண்டுகளுக்கு கெமரின் மையமாக திகழ்ந்து பத்தாம் நூற்றாண்டின் முதல் பகுதியில் கோகெர் கொஞ்ச காலம் தலைநகராக விளங்கியது. அங்கோர் பகுதியில் முதல் மலைக் கோயிலாக விளங்கிய பனோம் பாகெஷங்கில் தனது அதிகாரத்தை நிறுவிய பசோவர்மன், தண்ணீரைத் தேக்கி வைக்கப் பெரிய ஏரியைக் கிழக்கு ஏரி என்ற பெயரில் கட்டினான்.

முதலாம் சூரியவர்மன் (1002 - 50) அரசு அமைப்புகளை வலிமைப்படுத்தியும் உள்ளூர்ப் பாதுகாப்பை மேம்படுத்தியும் சாம்ராஜ்ஜியத்தில் அமைதியையும் வளத்தையும் கொண்டு வந்தான். பல வெற்றிகரமான போர்கள் மூலம் இவன் தனது ராஜ்ஜியத்தைத் தெற்கில் சியாம் வளைகுடா வரை விரிவுபடுத்தினான். இவன் கைப்பற்றிய நகரங்களில் லோவோ (இன்றைய லுப்பூரி) பகுதியும் ஒன்று. அடுத்த இரண்டு நூற்றாண்டுகளுக்கு கெமெரின் மையமாகவே இப்பகுதி விளங்கியது. மத நம்பிக்கையில் இவனுக்கிருந்த சகிப்புத்தன்மையினால் தேவராஜ மதக் கோட்பாடு, புத்த மதத்தோடு இயங்கியது.

இரண்டாம் சூரியவர்மன் (1113 - 50) நீண்ட காலம் ஆட்சி செய்தான். தெற்கு வியட் நாமில் உள்ள சாமஸ், தாய்லாந்தில் உள்ள சியாமிஸ் ஆகிய அண்டை நாடுகளில் பல படையெடுப்புகளை இவன் சந்திக்க நேர்ந்தது.

இந்த இரு நாட்டோடு போர் செய்த போதும் கெமர்களின் கட்டடக் கலையின் உன்னதமான சாதனையாக கருதப்படும் அங்கோர்வாட்டை இவன் கட்டினான்.

ஏழாம் ஜெயவர்மன் (1181 -1219) வெளிநாட்டவரை கவரும் விதமாக ஏராளமான கோயில்களைக் கட்டியதன் மூலம் அரச மரபில் இவன் தனித்து நிற்கிறான். ஆற்றுக் கரையிலிருந்தும் ஏரிப் பக்கத்திலிருந்தும் புறப்பட்டு வந்து 1177 ஆம் ஆண்டில் திடீர்த் தாக்குதல் மூலம் தலைநகரை சாம்ஸ்கள் அழித்தனர். ஏழாம் ஜெயவர்மன் சாம்ஸ்களைத் துரத்தி அடித்து தனது சாம்ராஜ்ஜியத்தை நிலைப்படுத்தினான். இவன் அங்கோர் தோம் நகரை உருவாக்கி மஹாயான புத்த மதத்தை ஆரம்பித்து வைத்தான். பெயான் நினைவுச் சின்னத்தில் இது காட்சி அளிக்கிறது. ஏழாம் ஜெயவர்மனின் ஆணைக்கிணங்க நடந்த கடற்போர்களின் சாம்ஸ்களை வெற்றி கண்ட கெமர்களின் வெற்றிச் செய்திகள் இக்கோயிலின் தூண்களில் செதுக்கப்பட்டிருக்கின்றன. இவனது ஆட்சி காலத்தில் சாம்ராஜ்ஜியத்தின் எல்லை, வியட்நாம் கடற்கரையிலிருந்து பர்மாவில் உள்ள பாகன் வரை விரிந்து மற்றும் லாவோசில் உள்ள வியண்டினிலிருந்து மலையா தீபகற்பம் வரை பரவி இருந்தது. இவனுடைய மறைவுக்குப் பிறகு கெமர் வலிமை குலைந்தது.



(தொடரும்)




# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 34

பகுதி - I

- 2008 ஆம் ஆண்டு 21 ஆம் ஆண்டின் முதல் தசாப்தத்திற்குரியதாகும். இதற்கேற்ப கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

21) 2001 ஆம் ஆண்டு பிறந்த பிள்ளை

1. 19 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்குரியதாகும்
2. 21 ஆம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்திற்குரியதாகும்.
3. 20 ஆம் நூற்றாண்டின் பத்தாம் தசாப்தத்திற்குரியதாகும்.

22) 20 ஆம் நூற்றாண்டின் 6 ஆம் தசாப்பத்திற்குரிய ஆண்டு

1. 1955 2. 1965 3. 2055


23) ஒரு விளையாட்டு மைதானத்திலுள்ள 10 பேர்களிடையே 7 பேர் குடையைப் பிடித்துக் கொண்டு 6 பேர் தொப்பியை அணிந்து கொண்டும் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் குடையைப் பிடித்து கொண்டே, தொப்பியை அணிந்து கொண்டோ இருக்கின்றனர். சிலர் தொப்பியை அணிந்து கொண்டோ இருக்கின்றனர். சிலர் தொப்பியை அணிந்து கொண்டு குடையைப் பிடித்ததுக் கொண்டும் இருக்கின்றனர் அவ்வாறு தொப்பி, குடை இரண்டையும் பாவிப்பவர்களின் எண்ணிக்கை யாது ?

1. 3 2. 6 3. 7

24) தந்தையார் மாம்பழத்தையும் அன்னாசிப் பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம்பழத்தை விரும்புவதில்லை. தாயார் தோடம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அன்னாசிப்பழத்தை விரும்புவதில்லை. நான் விளாம்பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகிறேன் எனின் நாம் மூவரும் விரும்பும் பழம் யாது?

1. விளாம்பழம் 2. தோடம்பழம் 3. மாம்பழம்

25) உருவில் காணப்படும் திண்மத்தைப் கோட்டு வழியே வெட்டும் போது கிடைக்கும் முகத்தின் வடிவம்



1. செவ்வகம்
2. வட்டம்
3. முக்கோணி

26) தாயார் ஒருவர் தன்னிடத்தில் இருந்த பணத்தில் ½ பங்கை புத்தகம் வாங்க செலவழித்தார். அதன் பின்னர் அவர் மிகுதிப் பணத்தை இரு சம பகுதிகளாகப் பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்க செலவிட்டார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூ 50 எனின்,அவர் புத்தகங்களை வாங்க செலவழித்த பணம் எவ்வளவு ?

1. ரூ 50 2. ரூ 100 3. ரூ 200

- ஓர் ஓட்டப் போட்டியில் 5 பிள்ளைகள் ஓடிமுடித்த விவரம் பின்வருமாறு

குமார் - 5 நிமிடம்
மோகன் - 8 நிமிடம்
பிரசாந்தன் - போட்டியை முடிக்கவில்லை
சந்திரன் - 4 நிமிடம்
சேகர் - 6 நிமிடம்

27) அவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்குமுறை

1. சந்திரன், குமார், சேகர், மோகன்
2. மோகன், சேகர், குமார், சந்திரன்
3. சந்திரன், பிரசாந்தன், குமார், மோகன்

- ரூ.453 .18 ஐக் குறியீடுகளில் R.CFD. BG எனக் காட்டலாம். எனின்,

28) ரூ 1853.34 ஐ எவ்வாறு காட்டலாம் ?

1. R.AHEC.CD 2. R.BGFD.DC 3.R.CFD.BG

29) R.ABCD.E F இனால் காட்டப்படுவது யாது?

1.ரூ 1234.56 2. ரூ 2134.65 3. ரூ 2143.65

30) தரப்பட்டுள்ள கவிதையின் நான்கு வரிகளின் சரியான ஒழுங்கு முறைஎது?

(W) அங்கே சென்று கற்பதனால் (M) அறிவு மேலும் வளருமே
(N) எங்கள் பள்ளிக் கூடமே (H) எளிமை மிக்க நிலமையே


1. W N M H 2.N H W M 3.N W M H

31) கண்ணன் 14 விசுக் கோத்துப் பெட்டிகளைக் கடையில் வாங்கி வீட்டிற்குக் கொண்டு வரவேண்டி இருந்தது. அவன் ஒரு தடவையில் 4 விசுக்கோத்துப் பெட்டிகளை மாத்திரம் கொண்டுவர முடியும். எனின் அவன் குறைந்தது எத்தனை தடவை வீட்டிற்கு கொண்டு வரவேண்டும் ?

1. 3 2. 4 3. 5




## புள்ளிகளை இணையுங்கள்



# தோட்டக்காரனும் குரங்கும்



அது ஒரு அழகிய கிராமம். அந்த கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் தோட்டத்தில் உள்ள செடி கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வந்தான். அவன் தண்ணீர் ஊற்றும்போதெல்லாம் அங்கு சில குரங்குகள் வந்து விளையாடும். பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனும் குரங்கும் நண்பர்களாயிருந்தன. தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அப்படியே செய்து வந்தன.

ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. குரங்குகளை அழைத்து விடயத்தைச் சொன்னான். குரங்குகளுக்கு சந்தோம். ஆனால், அவற்றுக்கு ஒரு பிரச்சினை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

"அது ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லை. வேர் பெரியதாக இருந்தால் நிறைய தண்ணீர் ஊத்துங்க. சிறிய வேரா இருந்தால் கொஞ்சமா தண்ணீர், ஊத்துங்க" என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக்காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. "என்னாச்சு?" என்றான் தோட்டக்காரன்."வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க்கிறதுக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம்" என்றன குரங்குகள்.

## 08 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# 2020 ஆம் ஆண்டுக்குள் வடக்கு, கிழக்கு கண்ணிவெடிகளற்ற பிரதேசமாக்கப்படும்




கொழும்பு, மே 25

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் வடக்கு, கிழக்கில் யுத்த காலத்தின் போது புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை முழுமையாக அகற்றி அப்பகுதியில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

முகமாலைப் பகுதியில் சுமார் 300 குடும்பங்களும் எப்போது குடியேற்றப்படும் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்ட பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அரசன்கேணி, வேம்படுகேணி, கிளாலி, முகமாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நிலக்கண்ணிவெடி ஆபத்துள்ள பிரதேசங்கள் தவிர்த்த ஏனைய எல்லா பிரதேசங்களிலும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் முகமாலை முன்னரங்கு பகுதியில் யுத்த காலத்தின்போது அதிகளவான நிலக்கண்ணிவெடிகள் பல அடுக்குகளாகப் புதைக்கப்பட்டுள்ளகாரணத்தினால் அவற்றை மிகவிரைவில் அப்புறப்படுத்தி மக்களை மீள்குடியேற்றுவதில் பாரிய சிரமமுள்ளது.

எனினும் உலக நாடுகளின் கண்ணிவெடிகள் அகற்றும் அமைப்புகளுடன் இணைந்து எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள் அந்தப் பிரதேசத்திலுள்ள கண்ணிவெடிகளை அகற்றி வடக்கு, கிழக்கை கண்ணிவெடிகள் அற்ற பிரதேசமாக பிரகடனப்படுத்தி மக்களை மீள்குடியேற்றுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முகமாலையில் வெடிபொருள்கள்: மக்கள் குடியேற நீடிக்கின்றது தடை

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. எடுத்துரைப்பு

கொழும்பு, மே 25

முகமாலைப் பகுதியை மக்கள் குடியேற்றத்திற்கு உகந்த பகுதியாக உறுதி செய்து, மேற்படி பகுதியில் மீள் குடியேற்றத்துக்காக காத்திருக்கும் சுமார் 300 குடும்பங்களும் எப்போது மீளக்குடியேற்றப்படும் என்பதை அறிவிக்க முடியுமா?- என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற கேள்வி நேரத்தின்போது மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி. எம். சுவாமிநாதனிடமே இந்தக் கேள்வியை செயலாளர் நாயகம் எழுப்பியிருந்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத் துக்குட்பட்ட முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்கள், கடந்த காலயுத்தம் காரணமாக 2000ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து, இதுவரையில் மேற்படி பகுதிகளில் மீளக் குடியேற்றப்படாத நிலையில், வாடகை வீடுகளிலும், பிற பகுதிகளில் உறவினர்களது தயவுகளிலும் பெரிய பாதிப்புகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றன.

யுத்தத்தில் ஈடுபட்டிருந்த இரு தரப்பினரும் தொடர்ந்து மோதல்களை மேற்கொண்டிருந்த மேற்படி பகுதிகள் அதிகளவு ஆபத்தான வெடி பொருள்கள் புதைந்துள்ள பகுதிகளாகவும் காணப்படுகின்றன.

அந்த வகையில் இப்பகுதிகளில் வெடி பொருள்களை அகற்றுவது மிகுந்த சவாலுக்குரிய விடயமாகும் என்று வெடி பொருள்களை அகற்றுகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூறிவருகின்றன எனக் குறிப்பிடப்பிடப்படுகின்றது.

எனினும், மேற்படி சுமார் 300 குடும்பங்களின் நிலைமையை அவதானிக்கின்றபோது, அந்தக் குடும்பங்களது மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துகின்றது.

மேற்படி பகுதிகளில் வெடி பொருள்களை அகற்றி, மக்கள் குடியேற்றத்திற்கு உகந்த பகுதியாக உறுதி செய்து, மேற்படி சுமார் 300 குடும்பங்களும் எப்போது மீளக் குடியேற்றப்படும் என்பதை அறிவிக்க முடியுமா? அத்துடன் குறித்த பகுதிகளில் வெடி பொருள்களை விரைந்து அகற்றும் நோக்கில் மேலதிக நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ள முடியுமா? - எனக் கேள்வி எழுப்பினார். (ஐ)

## கொக்குத்தொடுவாய் அ.த.க.பா. '1ஏ' பாடசாலையாகத் தரமுயர்வு





முல்லைத்தீவு, மே 25

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வடமாகாணக் கல்வி அமைச்சரால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மாயபுர என்ற சிங்களக் குடியேற்றத்தால் நாள் தோறும் பல்வேறு அச்சுறுத்தல்களின் மத்தியில் இந்தப்பகுதி மக்கள் வாழ்ந்துவரும் நிலையில் தமது பிள்ளைகளின் மேற்படிப்புக்காக பல குடும்பங்கள் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து கடந்த ஆண்டுகளில் வெளியேறியிருந்தன.

இவ்வாறான சூழலில் அந்தப் பகுதியில் இருந்து கல்விக்காக இடம்பெயரும் குடும்பங்களைத் தடுக்கவும், அந்தப் பகுதிகளுக்குவேண்டிய அத்திய அவசியத் தேவைகளை நிறைவேற்றவும் வேண்டும் என்பதால் இந்தப் பாடசாலை '1ஏ' தரத்திற்கு தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் 95 வீத அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து உயர்தரத்திற்கு தெரிவாகியிருந்தனர். உயர்தரத்திற்கு தெரிவாகியிருந்த மாணவர்கள் இப்போது தங்களது சொந்தக் கிராமத்திலேயே தமது உயர்கல்வியைத் தொடர்கின்றனர். (ஐ)

## டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரிப்பு!

கொழும்பு, ம 25

நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நோய்ப்பரவல் மீண்டும் அதிகரித்துள்ளது என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை காணப்படுகிறது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பொதுவைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வாரமொன்றில் 200 டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேல், வடமேல், சப்ரகமுவ மாகாணங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகுகின்றனர் எனப் பொதுவைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயால் 16 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 18 ஆயிரம் பேர் வரையில் நோய்த் தொற்றுக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்குப் பல்கலை மாணவர் திருமலையில் ஆர்ப்பாட்டம்





கொழும்பு, மே 25

கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று அபயபுர சந்தியில் உள்ள வீதியை மறைத்து இடம்பெற்றது.

திருகோணமலை அனுராதபுரம் சந்தியில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் நடை பவனியாக தலைமையக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று மீண்டும் அபயபுர முச்சந்தியை சென்றடைந்தது.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டனர்.

தங்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதாகப் பல தடவைகள் தெரியப்படுத்தியும், எவ்வித நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக் கழக மாணவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கவில்லை என்கிறது சீனா!

அம்பாந்தோட்டையில் துறைமுக அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் வலயம் என்ற பெயரில், சீனா இராணுவத் தளத்தை அமைத்து வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை சீனத் தூதுவர் செங் ஷியுவான் நிராகரித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: -

இலங்கையில் சீனாவின் திட்டங்கள் தொடர்பாக பெருமளவில் ஊகங்கள் வெளியாகின்றன. ஆனால் அவற்றில் உண்மையில்லை. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்கள் அனைத்தும், உள்ளூர் அதிகாரிகளாலேயே கையாளப்படும் என்று உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

இது ஒரு கூட்டு முயற்சி. இலங்கைத் துறைமுக அதிகாரசபைக்கு 30 வீத பங்குகள் உள்ளன. இது ஒன்றும் சீனாவின் தனிப்பட்ட முதலீட்டு வலயம் அல்ல. ஏனைய நாடுகளும் முதலீடு செய்ய முடியும்.

நான் கூறுவதை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், இராணுவத் தளபதிகளும் உறுதிப்படுத்துவார்கள்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

# அணுஆயுத சோதனை கூடம் அழிக்கப்படுவதை பார்க்க சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு வடகொரியா அனுமதி

அணு ஆயுதச் சோதனைக் கூடம் பிரிக்கப்படுவதைப் பார்வையிட சர்வதேச ஊடகவியலாளர்களுக்கு வடகொரியா அனுமதி அளித்தது. கடைசி நேரத்தில் தென்கொரிய ஊடகவியலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இதை அந்த நாடு வரவேற்றுள்ளது.

தென் கொரியாவின் முயற்சியால், வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் – அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இடையே ஜுன் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் பேச்சு நடக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தென் கொரியா – அமெரிக்கா போர்ப் பயிற்சி கொரிய தீபகற்பத்தில் தொடங்கியது. இதற்கு கிம் கடும்

## தென் கொரிய ஒருங்கிணைப்பு அமைச்சகம் வரவேற்பு

எதிர்ப்பு தெரிவித்தார். பேச்சுக்கும் வர மாட்டேன் என்று எச்சரித்தார்.

அத்துடன், அணு ஆயுதங்களை, சோதனைக் கூடங்களை வடகொரியா தானாகவே அழிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் கூறியதற்கும் கிம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

எனினும், அணு ஆயுத சோதனையை தொடர்ந்து நடத்துவதில்லை என்று உறுதி எடுத்துள்ளோம். அதை உறுதிப்படுத்த பங்கி–ரி பகுதியில் உள்ள அணு ஆயுத சோதனை கூடத்தைப் பிரித்து வருகிறோம் என்று வடகொரியா தெரிவித்தது.

மேலும், அந்த அணு ஆயுத சோதனை கூடம் பிரிக்கப்படுவதைப் பார்வையிட சர்வதேச ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலருக்கு வடகொரியா அனுமதி அளித்தது. ஆனால் தென் கொரிய ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது.

அதனால் பெய்ஜிங்கில் இருந்து வடகொரியாவின் பியாங்யாங் செல்ல விருந்த தென்கொரிய ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கப்படவில்லை.

எனவே, அவர்கள் தென் கொரியா திரும்பினர். ஏனைய நாடுகளைச் சேர்ந்த நிருபர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வடகொரியாவின் வொன்சன் பகுதிக்கு விமானத்தில் சென்று இறங்கினர். அங்கிருந்து பங்கி–ரி பகுதி 200 கி.மீ. தூரத்தில் உள்ளது.

இந்த நிலையில் கடைசி நிமிடத்தில் 8 தென் கொரிய நிருபர்கள் அணு ஆயுத சோதனை கூடம் பிரிக்கப்படுவதை நேரில் பார்வையிட வடகொரியா அனுமதி வழங்கியுள்ளது. இதையடுத்து அவர்களும் வொன்சன் பகுதிக்கு நேற்றுமுன் தினம் சென்றடைந்தனர். வடகொரியாவின் இந்த நடவடிக்கையை தென்கொரிய ஒருங்கிணைப்புத்துறை அமைச்சகம் வரவேற்றுள்ளது.



# இத்தாலியில் ரயில் தடம்புரண்டு விபத்து; 2 பேர் பரிதாபமாகப் பலி

ரோம், மே 25

இத்தாலியின் டுரின் மாகாணத்தில் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்த லொறி மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் 2 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இத்தாலியில் உள்ள டுரின் மாகாணத்தில் தண்டவாளத்தில் நின்றுக் கொண்டிருந்த லொறி மீது ரயில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 3 பெட்டிகள் தடம்புரண்டன.

இந்த விபத்தில் ரயிலில் பயணம் செய்த பயணிகள் பலர் படுகாயமடைந்தனர். அவர்கள் ஹெலிக்கொப்டரில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களில் 2 பேர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தனர். 18 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். லொறி டிரைவர் காயங்களுடன் உயிர் தப்பினார்.

இந்த ரயில் உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிக்கு டுரின் நகரில் இருந்து புறப்பட்டு இவ்ரியாவிற்கு சென்று கொண்டிருந்தது. சுமார் 11.30 மணியளவில் கலுசோ நகருக்கு அருகில் செல்லும்போது இந்த விபத்து நடந்துள்ளது.

# மாயமான விமானத்தை தேடும் பணியை நிறுத்தம்

## மலேசிய அரசு உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

கோலாலம்பூர், மே 25


நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மாயமான மலேசிய விமானத்தைத் தேடும் பணி அடுத்த வாரத்துடன் நிறுத்திக் கொள்ளப்படும் என்று அந்த நாட்டு அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீனாவுக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் 8 ஆம் திகதியன்று எம்.எச். 370 என்ற விமானம் புறப்பட்டுச் சென்றது. 239 பயணிகளுடன் சென்ற அந்த விமானம், இந்தியப் பெருங் கடலுக்கு மேலே பறந்து கொண்டிருந்த போது திடீரென மாயமானது.

இதையடுத்து, விமானத்தைத் தேடும் பணியில் மலேசியா, ஆஸ்திரேலியா, சீனா ஆகிய நாடுகள் ஈடுபட்டன. பல கோடி டொலர்கள் செலவிட்ட போதிலும், விமானத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதனைத் தொடர்ந்து, காணாமல் போன கப்பல்கள், விமானங்களைக் கண்டறிவதில் நிபுணத்துவம் பெற்ற 'ஓன் இன்பினிட்டி' என்ற அமெரிக்க நிறுவனத்துடன் முந்தைய மலேசிய அரசு கடந்த ஜனவரி மாதம் ஒப்பந்தம் மேற்கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் படி, விமானத்



தைக் கண்டறிந்தால், அந்நிறுவனத்துக்கு மலேசிய அரசு 478 கோடி ரூபா வழங்க வேண்டும்.

கடந்த 5 மாதங்களாக தொடர்ந்து தேடுதல் பணிகள் நடைபெற்று வந்த போதிலும், மாயமான விமானத்தை அந்த நிறுவனத்தால் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், இந்தத் தேடும் பணி அடுத்த வாரம் முழுமையாக நிறுத்திக் கொள்ளப்படும் என்று மலேசிய போக்குவரத்துத்துறை அமைச்சர் அந்தோணி லோக் நேற்றுமுன்தினம் அறிவித்தார். இதன் மூலம், கடந்த 4 ஆண்டுகளாக நடைபெற்று வந்த தேடுதல் பணி முடிவுக்கு வரவுள்ளது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்கு; ஏழு பேர் உயிரிழப்பு



பக்தாத், மே 25

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் மக்கள் அதிகம் கூடும் பூங்கா ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு தற்கொலைப் படை நடத்திய தாக்குதலில் 7 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஈராக் நாட்டின் பக்தாத் நகரில், தற்போது இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமழான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்றுமுன் தினம் இரவு மக்கள் அதிகம் கூடும் பூங்கா ஒன்றில் தற்கொலைப் படை மூலம் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் கூறுகையில்–

'சந்தேகத்துக்கு உரிய நபர் நுழையும்போதே காவல்துறையினர் அவரை தடுக்க முயன்றுள்ளனர். இருப்பினும் அவர்களை மீறி உள்ளே சென்ற அந்த நபர் தன் உடலில் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார்'– எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும், பூங்காவின் முன்பகுதியிலேயே அவன் வெடிகுண்டை வெடிக்கச்செய்ததமையால் பாதிப்புகள் குறைவு எனவும் பொலிஸார் கூறி யுள்ளனர்.

இந்த வெடிகுண்டு தாக்குதலில் சுமார் 7 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். 16 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு இது வரை எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பினர் வடக்கு மற்றும் தெற்கு ஈராக் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா அதிகாரிகள் சிங்கப்பூர் செல்வதற்கு பாதுகாப்பு கவுன்ஸில் ஒப்புதல்

நியூயோர்க், மே 25

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் சந்திப்பின் போது இடம்பெறும் வடகொரியாவின் 15 பேர் கொண்ட குழுவுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்து பேசுவதற்கு ஆர்வமாக இருக்கிறேன் என கிம் ஜாங் அன் கூறினார். இதையடுத்து, இரு தலைவர்களும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்து பேச்சு நடத்த முடிவு செய்யப் பட்டது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் அன் சந்திப்பின் போது இடம்பெறவுள்ள 15 பேர் கொண்ட குழுவுக்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸில் நேற்றுமுன் தினம் ஒப்புதல் அளித்துள்ளது.

டிரம்ப் - கிம் சந்திப்பின் போது 15 பேர் கொண்ட வட கொரிய அதிகாரிகள் குழுவும் இடம்பெறவுள்ளது. இதற்கான அனுமதி கடிதத்தை ஐ.நா. சபை பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு அனுப்பி வைத்தது. இந்த கடிதத்தை பரிசீலித்த ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், வட கொரிய அதிகாரிகள் சிங்கப்பூர் செல்ல ஒப்புதல் அளித்துள்ளது.

# தூத்துக்குடி சம்பவத்தில் உயிரிழப்பு 13 ஆக உயர்வு



தூத்துக்குடித் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

தூத்துக்குடியில்ஸ்டெர்லைட்ஆலைக்கு எதிராக மக்கள் பெருமளவில் திரண்டு கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம் தூத்துக்குடியிலும் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர்.

இதையடுத்து தூத்துக்குடிப் பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸ் வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இதையடுத்து அனைத்துப் பகுதிகளிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் தீவிரமாக ரோந்து சுற்றி வருகின்றனர்.

தூத்துக்குடி அண்ணா நகர் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகலில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அப்போது போராட்டக்காரர்களைக் கலைக்க பொலிஸார் முயன்றனர். ஆனால் வாக்குவாதம் முற்றிய நிலையில், பொதுமக்கள் கற்களை வீசித்தாக்கினர். பொலிஸாரும் தடியடி நடத்தினர்.

ஒரு கட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால்போராட்டக்காரர்கள் சிதறி ஓடினர். இதில் காளியப்பன் (வயது 22) என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த உசிலம்பட்டியைச் சேர்ந்த ஜெயராமன் என்பவர் உயிரிழந்தார். நேற்று செல்வசேகர் என்பவரும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இதனால், பலி எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

---

தூத்துக்குடிச் சம்பவத்தைக் கண்டித்து

## இன்று தமிழகத்தில் முழு அடைப்பு!

முன்னின்று நடத்துகின்றது. தி.மு.க

தூத்துக்குடி, மே 25

தூத்துக்குடிச் சம்பவத்தை கண்டித்து தி.மு.க. தலைமையில் அறவழியில் மாநிலம் தழுவிய முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படுகிறது.

இதுகுறித்து தி.மு.க. செயல் தலைவரும், தமிழக எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியோ, அமைச்சர்களோ இதுவரை தூத்துக்குடியில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் கூறவோ, தவறு செய்த காவல்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவோ முன் வரவில்லை. தனியார் ஸ்டெர்லைட் ஆலை யின் நலன்களுக்காக தூத்துக்குடியையே போர்க்



களமாக்கி, பொதுமக்கள் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கும் அ.தி.மு.க. அரசின் மீது தூத்துக்குடி மாவட்ட மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழக மக்களும் ஆத்திரத்திலும், கடும் கோபத்திலும் இருக்கிறார்கள்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கண்டன ஆர்ப்பாட்டத்தை ரத்து செய்து விட்டு, தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலும், அ.தி.மு.க. அரசின் அலட்சியத்தால் அடுத்தடுத்து நடத்தப்பட்டுள்ள விபரீதமான துப்பாக்கிச் சூட்டை கண்டித்தும், சுற்றுச்சூழலுக்கும், பொதுமக்களுக்கும் ஆபத்தாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக உடனே மூடவேண்டும் என்று வலியுறுத்தியும், தமிழகத்தில் சட்டம்,ஒழுங்கை காப்பாற்றி பொதுமக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிப்பதில் முழுமையாக தோற்றுவிட்ட அ.தி.மு.க. அரசு பதவி விலகக் கோரியும் தி.மு.க, காங்கிரஸ், திராவிடர் கழகம், ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனித நேய மக்கள் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளின் சார்பில் வெள்ளியன்று ஒரு நாள் அறவழியில் மாநிலம் தழுவிய முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த முழு அடைப்பில் அனைத்து தர மக்களும் பங்கேற்று வெற்றிகரமாகவும், அதே நேரத்தில் ஜனநாயக வழியில் அமைதியாகவும் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

## ஸ்டெர்லைட் ஆலையின் மின் விநியோகம் துண்டிப்பு




தூத்துக்குடி, மே 25


ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ள நிலையில், நேற்றுக் காலை முதல் ஸ்டெர்லைட் ஆலைக்கான மின்சார இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மாசுக்கட்டுப்பாடு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் ஸ்டெர்லைட் ஆலைக்கான மின்சார இணைப்பை மின்சார வாரியம் துண்டித்துள்ளது. நேற்றுக் காலை 5.30 மணி முதல் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## எல்லையில் பாக். தாக்குதல்; பொதுமக்கள் 5 பேர் பலி:!

76 ஆயிரம் கிராம மக்கள் வெளியேறினர்



ஜம்மு, மே 25

ஜம்மு - காஷ்மீரில் பாகிஸ்தான் படையினர் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். எல்லைப் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கானோர் வெளியேறியமையால் ஆர்னியா நகரம் மற்றும் சுமார் 100 கிராமங்கள் வெறிச்சோடின.

ஜம்மு காஷ்மீரில் ஜம்மு, கதுவா, சம்பா ஆகிய மாவட்டங்களில் சர்வதேச எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் உள்ள இந்திய ராணுவ நிலைகள் மற்றும் கிராமங்களைக் குறிவைத்து பாகிஸ்தான் படையினர் நேற்று முன்தினம் 9 ஆவது நாளாகத் தாக்குதல் நடத்தினர். துப்பாக்கியால் சரமாரியாக சுட்டும் பீரங்கிக் குண்டுகளை வீசியும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் 5 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், எல்லையோர கிராமங்களில் வசிக்கும் 76 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கடந்த சில நாள்களில் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். வெளியேறிய அனைவரும் உறவினர் வீடுகள் அல்லது அரசு முகாம்களில் தங்கியுள்ளனர்.

---

## ஸ்டாலின், வைகோ, திருமா மீது 3 பிரிவுகளில் வழக்குப் பதிவு!

சென்னை, ம 25

தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களை மருத்துவமனையில் சந்தித்து ஆறுதல் கூறிய மு.க.ஸ்டாலின், வைகோ, திருமாவளவன் உள்ளிட்ட 9 அரசியல் கட்சித் தலைவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தின்போது கலவரம் வெடித்தது. கலவரத்தைக் கட்டுப்படுத்த பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில், 2 பெண்கள் உள்ளிட்ட 9 பேர் உயிரிழந்தனர். 19 பொலிஸார் உள்ளிட்ட 83 பேர் காயமடைந்தனர்.

கலவரத்தில் காயமடைந்தவர்கள் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். போராட்டத்தின் காரணமாக 25 ஆம் திகதி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தூத்துக்குடி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து சிகிச்சை பெறுபவர்களை நேற்றுமுன்தினம் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழக காங்கிரஸ்



தலைவர் திருநாவுக்கரசர், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், மக்கள் நீதி மய்யக் கட்சித் தலைவர் கமல்ஹாசன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், லட்சிய திமுக தலைவர் டி.ராஜேந்தர் ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இந்நிலையில், 144 தடை உத்தரவை மீறி, அதிக வாகனங்களில் சென்றனர் என ஸ்டாலின், வைகோ, திருநாவுக்கரசர், திருமாவளவன், கமல்ஹாசன், ஜி.கே.வாசன், டி.ராஜேந்தர், ரா.முத்தரசன், கே.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனத் தெரிவித்து இந்தியத் தண்டனைச் சட்டம் 143, 188 மற்றும் 153(ஏ) பிரிவுகளின் கீழ்பொலிஸார்வழக்குப்பதிவுசெய்துள்ளனர்.

## முள்ளிவாய்க்கால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் கலந்துக் கொண்டவர்களுக்கு இராணுவத்தினர் குளிர்பானம் வழங்கியமை தொடர்பாக வானொலி நிகழ்ச்சியொன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துக் கொண்டவர்களுக்குக் குளிர்பானம் வழங்கும் செயற்பாடு, இராணுவத்தினரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையா அல்லது அரசின் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக முன்னெடுக்கப்பட்டதாஎன்பதுதெரியவில்லை.

ஆனால், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னெடுப்பதற்கோ அல்லது அதில் பங்கேற்றவர்களுக்கு குளிர்பானம் வழங்கவோ அரசு அனுமதியளித்திருக்கக் கூடாது.

முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு பொதுமக்களைநினைவு கூர்வதற்கானதல்ல. மாறாகப் பேரினவாதத்தைத் தூண்டும் செயற்பாடாகவே இது அமைந்துள்ளது. – என்றார். (ஐ)

## கராஜுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்த குற்றச்சாட்டில் கைது செய்த இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இயங்கி வந்த மாவா பாக்கு விற்பனை நிலையம் கடந்த மாதம் பொலிஸாரால் அதிரடியாக முற்றுகையிடப்பட்டு, அங்கிருந்த பெருந்தொகைப் போதைப் பாக்குகள் மீட்கப்பட்டமையுடன் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர் 'மாவா' பாக்கை வெளிமாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்து, நாவலர் வீதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு அருகில் உள்ள மோட்டார் சைக்கிள் திருத்தகத்துக்குள்வைத்துவிற்பனைசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றது.

இங்கு 'மாவா' பாக்கு மாணவர்கள், இளைஞர்களுக்கு விற்பனைசெய்யப்பட்டுவந்தனவாம்.

இதுதொடர்பில்யாழ்.பொலிஸ் உயர் அதிகாரிக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் அவ்விடத்துக்குச் சென்ற இரகசியப் பொலிஸார் திருத்தகத்தில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு விற்பனைக்குத் தயார் செய்யப்பட்ட நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 132 கிராம் மாவை பாக்கை மீட்டனர்.

இதனை அடுத்து திருத்தக உரிமையாளரான மாணிக்கம் வசந்தகுமார், ஜெயசீலன் துசிலன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். நேற்று இருவரும் யாழ்.நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் சான்றுப் பொருள்களுடன் ஆஜர்செய்யப்பட்டனர்.

அவர்கள் தொடர்பான வழக்கை விசாரணை செய்த நீதிவான் இருவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ-7)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பின் பிரகாரம் மஹிந்த ராஜபக்ஷ இன்னொரு தடவை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க முடியாது. இதனால் அவரின் அணியில் அவரால் பரிந்துரைக்கப்படும் நபர் போட்டியிடுவார். இதன்படி அந்த நபர் யார் என்பது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு அவரிடமே தங்கியுள்ளது. அவர் அந்தத் தீர்மானத்தின்போது தன்னை வேட்பாளராகக் களமிறக்கத் தீர்மானித்தால் அதனைத்தான் ஏற்றுக்கொள்வார் எனக் கோட்டாபய தெரிவித்துள்ளார்.

"எவ்வாறாயினும் இன்னும் அவர் அது தொடர்பாகத் தீர்மானிக்கவில்லை. சரியான நேரத்தில் அவர் தீர்மானம் எடுப்பார்."– என கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிங்கள வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## எதிரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரித்த சு.கவினர் 16 பேர் மீது அரசுக்குள் எதிர்ப்பு வலுத்தமையையடுத்து அவர்கள் தங்களது அமைச்சர், பிரதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகளைத் துறந்து விட்டு எதிரணி வரிசையில் போய் அமர்ந்தமை தெரிந்ததே.

அவர்கள் 16 பேரும் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தனர். அப்போதே அவரது தலைமையைத் தாங்கள் ஏற்கின்றனர் என்பதை அவர்கள் 16 பேரும் தெரிவித்தனர் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளத் தாங்கள் இணங்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கிறார். கூட்டு எதிரணியில் உள்ளநாடாளுமன்றஉறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்கள் தான்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் என்ற வகையில், கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இருந்தாலும்,எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இணைந்து செயற்படுவோம்.

இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது, மஹிந்தராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். இரண்டு பேருமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர்தான். – என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில்-இவ்விடயத்தை ஒட்டிக் கருத்து வெளியிட்ட – 16 எம்.பிக்களில்ஒருவரான–டிலான் பெரேரா –

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன மீண்டும் போட்டியிட வேண்டும் என்றால் அவர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்." – என்று கூறியிருக்கின்றார். (உ)

## ஞானசாரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவை, ஹோமாகம நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து மிரட்டியமை தொடர்பில் பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரரைக் குற்றவாளி என ஹோமாகம நீதிவான் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளரும், கேலிச் சித்திரக் கலைஞருமான பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு ஹோமாகம நீதிமன்ற வளாகத்தில் வைத்து பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞானசார தேரர், அச்சுறுத்தல் விடுத்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக சந்தியா எக்னெலிகொட வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்தை அவமதித்தார்என்றகுற்றச்சாட்டிலும் வண.ஞானசார தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டபோதும் பின்னர் அந்த வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தது.

சாட்சிகளுக்கு அழுத்தம் மேற்கொள்வதையும், வெவ்வேறு இடங்களில் பல்வேறு அறிக்கைகளை வெளியிடுவதையும் நிறுத்திக் கொள்ளுமாறும் நீதவான் அவருக்குக் கடும் நிபந்தனை விதித்தே பிணை வழங்கினார்.

இந்த நிலையில் ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

ஹோமாகமநீதிவான்உதேஷ் ரணதுங்க முன்னிலையில் வழக்கு தீர்ப்புக்காக நேற்று அழைக்கப்பட்டது.

சந்தியா எக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் எதிரியான வண. ஞானசார தேரர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு சாட்சியங்களின் ஊடாக நியாயமான சந்தேககங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அதனால் அவரைக் குற்றவாளி என மன்று தீர்ப்பளிக்கிறது என்று நீதிவான் அறிவித்தார்.

வண.ஞானசார தேரரின் கைவிரல் ரேகையையும் பெற்றுக் கொள்ள உத்தரவிட்ட நீதிவான், அவருக்கான தண்டனைத் தீர்ப்பை எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி வழங்குவதாக அறிவித்து வழக்கை ஒத்தி வைத்தார்.

இதேவேளை, "ஞானசார தேரரால் தொந்தரவுக்கு உள்ளான அனேகமானோர் இந்த நாட்டில் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்குமான வெற்றி இது, அவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும்." என ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார்.

நேற்று நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவித்த சமயமே, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 28 ஆம் திகதி பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கொழும்பு 4 ஆம் மாடிக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இவர் 2010 ஆம் ஆண்டு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்.

இவர் கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அரசில் எஞ்சியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இணைந்த அரசில் இருந்து வெளியேற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதிச் சபாநாயகர் இல்லத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கியதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர்களும் தேசிய அரசில் இருந்து வெளியேறினோம். இந்த விடயம் யதார்த்தமாக இடம் பெற்றதல்ல. கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய அரசு பெற்றுக் கொண்ட பெறுபேறுகளைக் கருத்திற் கொண்டே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதற்குப் பிரதமரின் நம்பிக்கையில்லாப் பிரேரணையும் சாதகமாகக் காணப்பட்டது.

தேசிய அரசில் இருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலான கூட்டு எதிரணியில் இணைந்துக் கொண்டுள்ளோம். இருப்பினும் ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் கருத்திற் கொண்டே செயற்படுவோம். கட்சிக்கு எதிராக ஒருபோதும் செயற்பட மாட்டோம். இதுவே எமது 16 உறுப்பினர்களின் கூட்டு கொள்கையாகக் காணப்படுகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தி முறையற்ற நிர்வாகத்தை மேற்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகச் செயற்படுவதை நோக்கமாகக் கொண்டே பொது எதிரணியுடன் இணைந்துக் கொண்டுள்ளோம்.கூட்டு எதிரணி என்பது தனிப்பட்ட ஒரு கட்சியல்ல. பல கட்சிகளை ஒன்றிணைத்த கட்சியாகவே காணப்படுகின்றமையினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே தேசிய அரசைக் கடந்த மூன்று வருடகாலமாக முன்னெடுத்துச் செல்கின்றன. அரசின் அனைத்துக் கொள்கைத் திட்டங்களும் தோல்வியடைந்துள்ளன. மக்களால்வெறுக்கப்பட்ட நிர்வாகத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதால் எவ்வித பயனும் ஏற்படமாட்டாது.

2020ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தற்போது நாட்டில் காணப்படுகின்ற அனைத்து அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கும் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் ஆயுதமாகக் காணப்படுகின்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதியாக வேண்டுமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முன்னர் இவரைப் பதவிநீக்கம் செய்திருந்தால் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசை விட்டு வெளியேறியிருப்பார்.

அத்துடன் தற்போது தேசிய அரசில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வெளியேறவேண்டும். அதன்பின்னர் கட்சியின் முழுமையான மறுசீரமைப்பை மேற்கொண்டு கூட்டு எதிரணியுடன் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடலாம். இந்தவிடயங்களைக்கையாண்டால் ஜனாதிபதியாக மைத்திரிபால மீண்டும் தெரிவு செய்யப்படலாம். தற் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களினால் ஆதரிக்கப்பட்டவராகவே இன்றும் காணப்படுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் முறையற்ற நிர்வாகத்தில் அவர் பங்குதாரராக இருப்பதே மக்களின் வெறுப்பிற்குப் பிரதான காரணம்.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துப் போராட்டங்களிலும் பொது எதிரணியுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாகச் செயற்படுவோம். கட்சியைப் பலப்படுத்தி எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாரிய தோல்விகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இப்போதிருந்தே செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். – என்றார். (ஐ)

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் சட்டவிரோதமாக கேபிள் ரீ.வி. இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வந்து முன்னெடுக்கவுள்ளனர்.

ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைக்கு யாழ்ப்பாணம் பொலிஸாரின் சேவையையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.

யாழ்ப்பாணம் பொலிஸாரின் உதவியைப் பெற்று இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்தநீதிமன்று அனுமதி வழங்கவேண்டும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் புதன்கிழமை விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சட்டவிரோத கேபிள் ரீ.வி. இணைப்புக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அனுமதி அளித்துக்கட்டளைவழங்கினார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாநகரம் மற்றும் நல்லூர் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் சட்டவிரோத கேபிள் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் எனத் தொலைத்தொடர்புஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது. (ஐ – 7)

# ஓட்டங்கள் பெறுவதை விட நம்பிக்கைதான் மிக முக்கியம்

சாதூரியமான ஆட்டத்தின் மூலம் கொல்கத்தா அணி 11 ஆவது ஐ.பி.எல். தொடரின் வெளியேற்ற சுற்றில் வெற்றி பெற்று அடுத்த போட்டிக்குத் தகுதி பெற்றதோடு, ராஜஸ்தான் அணியை தொடரில் இருந்தே வெளியேற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம்புதன்கிழமை நடைபெற்ற 'எலிமினேட்டர்' போட்டியில், எளிதாக எட்டக்கூடிய இலக்கினை கொல்கத்தா அணிநிர்ணயித்தபோதும் சிறப்பான களத்தடுப்பு மற்றும் பந்து வீச்சின் ஊடாக ராஜஸ்தான் அணியை வீழ்த்தி இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியது.

இந்த வெற்றியின் பின்னர் கொல்கத்தா அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக் கருத்து தெரிவிக்கும்போது, நாம் ஆரம்பத்தில் தடுமாற்றத்தினைச் சந்தித்தாலும் பின்னர் அதிலிருந்து மீண்டு வந்தோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இப்படியான போட்டிகளில் ஓட்டங்கள் முக்கியம் என்பதை விட நம்பிக்கை தான் மிக முக்கியம் எனச் சுட்டிக்காட்டிய கார்த்திக், எங்கள் அணியின் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாக விளையாடி, சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் சிறப்பாகப் பந்து வீசினார்கள் எனவும் கூறியுள்ளார்.




ரஷ்யாவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கான இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் புதிய தலைவராக ஹரிகேன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து இங்கிலாந்து உதைபந்தாட்ட அணியின் பயிற்றுநர் வுத்கேட் கூறியுள்ளவை வருமாறு–

இங்கிலாந்து உதைபந்தாட்ட அணிக்காக ஹரிகேன் சிறப்பாக விளையாடிவருகிறார். அவரிடம் தலைமைத்துவப் பண்புக்கான அற்புதமான திறமைகள் உள்ளன. – என்றார்.

இது தொடர்பாக ஹரிகேன் குறிப்பிடுகையில்–

உலகக் கிண்ண தொடருக்கு இங்கிலாந்து அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமை எனக்கு மிகப்பெரிய கௌரவம் ஆகும். இதனால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன். – என்றார்.

# ஓய்வு பெறுகிறார் வில்லியர்ஸ் அதிர்ச்சியில் கிரிக்கெட் உலகம்




கிரிக்கெட் உலகின் நட்சத்திர வீரரும் அதிரடி ஆட்டத்தில் பெயர்பெற்றவருமான தென்னாபிரிக்க அணியின் எ.பி.டி. வில்லியர்ஸ் அனைத்து விதமான சர்வதேச போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறப்போகிறார் என அறிவித்துள்ளமை கிரிக்கெட் ரசிகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

நட்சத்திர வீரர் டி விலியர்ஸ், கடந்த 2004ஆம் ஆண்டு இங்கிலாந்து அணிக்கு எதிராக போர்ட் எலிசபெத்தில் நடந்த டெஸ்ட் போட்டியின் மூலம் தென்னாபிரிக்க அணிக்காக அறிமுகமாகி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார்.

அதன் பின்னர் ஒருநாள் போட்டிகள் மற்றும் ரி20 போட்டிகளில் கால் பதித்த டி வில்லியர்ஸ், மைதானத்தை அறிந்து களத்திற்கு ஏற்றாப் போல் துடுப்பெடுத்தாடி தனி முத்திரையைப் பதித்தார். எந்த விதமான பந்துகளையும் எளிதாக எதிர்கொண்டு இவர் நாலாபக்கமும் அடித்து ஆடும் திறன் படைத்திருந்த காரணத்தினால் 360 கோண வீரர் (360 டிகிரி) என்ற பெயரை தனதாக்கிக் கொண்டார்.

இவ்வாறான நிலையில் உடல் நலக்குறைவு காரணமாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதைச் சில ஆண்டுகளாக தவிர்த்திருந்த டிவில்லியர்ஸ், ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்தி வந்தார். இந்த நிலையில் கடந்த புதன்கிழமை அனைத்து விதமான சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் தான் ஓய்வு பெற்றுக் கொள்ளப் போவதாக திடீரென டிவில்லியர்ஸ் அறிவித்துள்ளார்.

34 வயதான வில்லியர்ஸ் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடுவார் எனப் பலரும் எதிர்பார்த்திருந்த வேளையில் இவ்வாறான ஓய்வு முடிவின் காரணமாக தென்னாபிரிக்க அணி மற்றும் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்னாபிரிக்க அணியின் முக்கிய வீரராகக் காணப்படும் வில்லியர்ஸின் ஓய்வு அந்த அணிக்கு பாரிய இழப்பாக அமையும் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டியதே.



# தஸ்கின் அஹமட்டின் டெஸ்ட் எதிர்காலம் நிறைவு பெறுகிறதா?

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் இளம் வேகப் பந்து வீச்சாளரான தஸ்கின் அஹமட்டின் டெஸ்ட் எதிர்காலம், சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

தஸ்கின் அஹமட், நீண்ட காலமாக முதுகு வலியால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அவர் இந்த உபாதையில் இருந்து மீளுவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளதாக மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, எதிர்வரும் ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான ரி – ருவென்ரி தொடரிலும் அவர் விளையாடுவது கேள்விக்குறியாகியுள்ளது.

இதுவரை ஐந்து டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள தஸ்கின் அஹமட், 7 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

# கோஹ்லி விடுத்த சவாலை ஏற்றுக்கொண்டார் மோடி!

கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி விடுத்த சவாலை ஏற்று, உடற்பயிற்சி செய்யும் வீடியோவை விரைவில் வெளியிட இருக்கிறார் எனப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:–

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் ராஜ்யவர்தன் சிங் ரத்தோர் உடற்பயிற்சி செய்வது போன்ற வீடியோ ஒன்றை வெளியிட்டு நாம் உறுதியாக இருந்தால் தான் நாடு உறுதியாக இருக்கும். அதனால் அனைவரும் உடற் பயிற்சி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, விராட் கோஹ்லி, சாய்னா நேவால், ஹிர்த்திக் ரோன் ஆகியோரிற்கு உடற்பயிற்சி செய்யும் வீடியோவை அனுப்பியிருந்தார்.

இதையடுத்து, ரத்தோரின் சவாலை ஏற்றுக்கொண்ட கோஹ்லி, தானும் உடற்பயிற்சி செய்வது போன்ற வீடியோவை டுவிட்டரில் வெளியிட்டு, அதில் தன் மனைவி அனுஷ்கா சர்மா, பிரதமர் மோடி, டோனி ஆகியோருக்கு அதனை அனுப்பியிருந்தார்.





மேலும் அந்த டுவிட்டர் பதிவில், "நான் ரத்தோர் விடுத்த சவாலை ஏற்று கொண்டுள்ளேன். இப்போது என் மனைவி அனுஷ்கா சர்மா, பிரதமர் மோடி, டோனி ஆகியோருக்கு இந்தச் சவாலை விடுக்கின்றேன்" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே கோஹ்லியின் சவாலை ஏற்றுக்கொள்கிறார் எனப் பிரதமர் மோடி தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளமையுடன், எனது உடற்பயிற்சி வீடியோவை விரைவில் வெளியிடுவேன் எனவும் பதிவிட்டுள்ளார்.

Sunrisers Hyderabad v Kolkata Knight Riders
இன்று
25.05.2018
இரவு 8.00 மணி

காலைக்கதிர் Kalaikkathir



# தூத்துக்குடிப் படுகொலைகளைக் கண்டித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிக்கை

தூத்துக்குடியில் அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், கலவரத்தை அடக்குதல் என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்டுள்ளமையை, வன்மையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழகம்,தூத்துக்குடியில் ஸ்ரெர்லயிட் தொழிற்சாலையை மூடுமாறு கோரிப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமையைக் கண்டித்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் விடுக்கப்பட்ட கண்டன அறிக்கையிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழகம்,தூத்துக்குடியில் சூழலை மாசுபடுத்தும் வகையில்செயற்பட்டுவந்த வேதாந்தா ஸ்ரெர்லயிட் நிறுவனத்தின் தொழிற்சாலையைமூடுமாறுகோரி அமைதி வழியில் தமிழக மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள்.

இப்போராட்டத்தின் நூறாவதுநாளானசெவ்வாயன்று (மே 22) பெரு மளவிலான மக்கள்அப்பகுதியில்திரண்டிருந்த நிலையில், தமிழக அரசின் பொலிஸார் அவர்கள் மீது பொறுப்பற்ற முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இச்சம்பவத்தில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுகளால் சூழலுக்குப் பாதிப்பு எற்படுவதைச் சுட்டிக்காட்டிய பொது மக்களதும், பொது அமைப்புகளதும் கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காத நிலையில் மக்கள் பல்லாயிரக்கணக்கில் கூடி ஜனநாயக வழியில் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அவ்வாறு அமைதி வழியில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வன்முறையில் ஈடுபடுவது போன்ற சூழலைத் திட்டமிட்டு உருவாக்கிக் கலவரத்தை அடக்குதல் என்ற பெயரில் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சகட்டுமேனிக்கு நடந்த தாக்குதலாக இல்லாமல், கலவரத்தை அடக்குகின்றோம் என்ற போர்வையில் இப்போராட்டங்களை ஒழுங்கு செய்த போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மீது பொலிஸார் குறி சூட்டுத் தாக்குதல் நடத்தியதன் மூலம் அவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

வன்முறையில் ஈடுபடாமல் அமைதி வழியில் போராட்டத்தை நடத்தியவர்கள் மீது இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்திய தமிழக பொலிஸாரின் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம், இவ்விடயத்தில்பாரபட்சமற்றமுறையில் விசாரணை நடத்தி குற்றமிழைத்தவர்கள்தண்டிக்கப்பட வேண்டும் என தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை தமிழ்த்தேசியமக்கள் முன்னணி வேண்டிக் கொள்கின்றது.

கொல்லப்பட்ட தமிழக உறவுகளின் குடும்பத்தினருக்கு எமது இரங்கலை தெரிவித்துக்கொள்வதுடன், தமிழக மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடர்ந்தும் தோழமை உணர் வுடன் தனது தார்மீக ஆதரவை வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றது - எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில் நாளைய தினம் உண்ணாவிரதம்

மாட்டிறைச்சிக் கடை மற்றும் கொல்களத்தை மூடுமாறு கோரி நாளை சனிக்கிழமை காலை முதல் மாலை வரை சாவகச்சேரி பஸ்நிலையத்தில்உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ். நாகவிகாரை பீடாதிபதி மற்றும் சின்மயமிஷன், சிவசேனை, தென்மராட்சி இந்து இளைஞர் மன்றம் உட்பட பொது அமைப்பு களின் பிரதிநிதிகள் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவிக்கும்படி மேற்படி அமைப்பினர் பொதுமக்களையும்ஏனைய அமைப்புக்களைச் சார்ந்தோரையும்வேண்டியுள்ளனர். (உ)

## மீசாலையில் டிப்பர்கள் மோதி ஒருவர் காயம்



தென்மராட்சி - மீசாலை - ஐயா கடைச் சந்திப் பகுதியில் நேற்று அதிகாலை வீதியோரமாக நிறுத்தப்பட்டிருந்த டிப்பருடன், வேகமாக வந்த மற்றொரு டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

ஐயா கடைச் சந்திப் பகுதியில் ஏ9 வீதி ஓரமாக நின்ற டிப்பருடன், கொடிகாமம் பகுதியில் இருந்து வந்த டிப்பர் பின்பக்கமாக மோதியதி லேயே இந்த விபத்து இடம் பெறுள்ளது.

## மாகாண மட்ட உடற்பயிற்சியில் இளவாலை கன்னியம் முதலிடம்




யாழ்ப்பாணம், மே 25

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில்பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர் மடம் அணி சம்பியனானது.

நேற்று ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியம் மடம் முதலாம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை இரண்டாம் இடத்தையும், கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் அணி முதலிடத்தையும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றன. (ஐ)

## நீதிபதி இளஞ்செழியனுக்கு யாழ். தளபதி மதிப்பளிப்பு



யாழ்ப்பாணம், மே 25

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றலாகிச் செல்லும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியனை யாழ்ப்பாணம் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராட்சி நேற்று நேரில் சந்தித்தார்.

இதன்போது மேல் நீதி மன்ற நீதிபதிக்கு மரத்திலான யானையை நினைவுச் சின்னமாகக் கட்டளைத் தளபதி வழங்கினார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. (ஐ-7)

## 1,500 தமிழ் ஆசிரியர்கள் மே 30 பணியில் இணைப்பு

கொழும்பு, மே 25

தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் 1500 பேர் 2 வருட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து இம்மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2016 - 2017 ஆம் கற்கை ஆண்டு ஆசிரியர் பயிற்சிக் கற்கை நெறிகளில் இணைந்து ஆசிரியர் பயிற்சியை பெற்றுக் கொண்ட இவர்கள் இரண்டு வருடப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து வெளியேறுகின்றனர். இவர்களில் 322 ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றவர்களாவர்.

மலையகப் பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியை கருத்தில்கொண்டு போட்டிப்பரீட்சை மூலம் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற இவர்கள் ஆசிரியர் கலாசாலைகளில் பயிற்சி பெறுவதற்கு 2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நான்கு தமிழ்மொழி ஆசிரியர் கலாசாலைகளில் இவர்கள் பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு ஆசிரியர் கலாசாலை பயிற்சிக்கான இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 (ஆ) தரத்தில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு ஓய்வூதிய உரித்துடன் கூடிய சம்பளத்திட்டத்தின் படி சம்பளம் வழங்கப்படும்.

ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெற்ற இவர்களுக்கு இதுவரை ஊக்குவிப்பு உதவி என்ற வகையிலேயே மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தது.

## மழைக்கு மத்தியிலும் மாணவர் போராட்டம்



வவுனியா பாவற்குளம் கணேஷ்வரா வித்தியாலய மாணவர்கள், பெற்றோர் நேற்றுக் காலை கொட்டும் மழைக்கு மத்தியிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பாவற்குளம் கணேஷ்வரா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் கடந்த டிசெம்பர் மாதத்துடன் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். அதன் பின்னர் கடந்த ஐந்து மாதங்களாக இந்தப் பாடசாலை அதிபர் இன்றியே இயங்கி வந்தது.

பாடசாலை மெய்வன்மைப் போட்டியின்போது வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் இந்தப் பாடசாலைக்கான அதிபரின் இன்மை பற்றி ஆசிரியர்கள்மற்றும்பெற்றோரினால்தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய வெகு விரைவில் அதிபரை நியமிப்பதாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரால் தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆயினும் இது வரை அதிபரை நியமிக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கொட்டும் மழைக்கு மத்தியிலும் பெற்றோர்கள், மாணவர்கள் இணைந்து பாடசாலை வாசலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட னர்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டிருந்தது. (ஐ-100)

## வெட்டுக்காயத்துடன் இளைஞனின் சடலம்!

### முல்லைத்தீவு பனங்கூடலுக்குள் மீட்பு



முல்லைத்தீவு, செல்வபுரம் பனங்கூடல் பகுதியில் வெட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது

கள்ளப்பாடு வடக்கு, முல்லைத்தீவைச் சேர்ந்த வரதராஜா சதாநிசன்(வயது - 28) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வரை இளைஞனைக் காணவில்லை எனத் தந்தையார் தேடித் திரிந்துள்ளார்.

செல்வபுரம் கள்ளுத் தவறணைப் பகுதியில் உள்ள பனங் கூடலுக்குள் மோட்டார் சைக்கிள் ஒன்று மாலை வரை நின்றதை அவதானித்த அயலவர்கள் முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தனர்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்து சென்று மோட்டார் சைக்கிளைப் பார்வையிட்டதுடன் அருகில் உள்ள பனங்கூடலுக்குள் சென்று பார்வையிட்டபோது கழுத்தில் வெட்டப்பட்ட நிலையில் வெட்டுக்காயங்களுடன் இளைஞனின் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்துள்ளனர்.

கிராமமக்கள்கொடுத்ததகவலையடுத்து இளைஞனின் தந்தையாரும் சம்பவ இடத்துக்குச் சென்றார்.

தந்தையார் மோட்டார் சைக் கிள் இலக்கத்தை வைத்து அது தனது மகனுடையது என உறு திப்படுத்தினார். இதன் பின்னர் மகனின் சடலத்தையும் அவர் அடையாளம் காட்டினார். இந்தச் சம்பவத்தல் செல்வபுரம் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுக் காலை அங்கு சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ் லெனின்குமார் நிலைமைகளை நேரில் பார்வையிட்டுச் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து உடலம் யாழ் போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்புப் பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கழுத்துப் பகுதியில் பாரிய வெட்டுக்காயம் இருப்பதால் இது திட்டமிட்ட கொலையாக இருக்கு மெனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ-81)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.